ISSN 2719 - 2520

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

செப்டெம்பர் - அக்டோபர் 2025

ஆண்டு 6 ▲ இதழ் 2

விலை 250/-



அன்பின் பாதை ஊடாக தனியொரு நபராக சமூகப்பணியாற்றும்

## றொசில்டா

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

செப்டெம்பர் – அக்டோபர் 2025

ஆண்டு 6 ▲ இதழ் 2

**பிரதம ஆசிரியர் : சித்தி வஃபீரா**

Chief Editor & publisher : Sithy Wafeera

**சிறப்பாசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்**

Hon. editor : Tamilnenjam Amine

**ஆசிரியர் குழு :**

Dr. ஜலீலா முஸம்மில்

கமர்ஜான் பீபீ, ஆர்.ஜே. பிரகலாதன்

நிலு டீன், மின்னத் ஸரா பரூஸ்

**வடிவமைப்பு:**

Omardeen Aysha Shakeela

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.

படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி:


email :
muththamizh.kalasam@gmail.com

The Editor of “Muththamizh kalasam”,
23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka


# நான் தேடிய பூ

நான் தேடிய பூ இங்கே தான்
இளஞ்சிவப்புப் பூ
பால் வாசம் நிறைந்தது
இனிமை ஈர்க்கிறது

நான் தேடிய பூ
இயற்கை தானோ?
அன்பில் நனைகிறது
ஒரு போதும் வாடுவதில்லை
சதா மலர்ந்து கொண்டிருக்கிறது

நான் தேடிய பூ
இங்கிதம் கொள்கிறது
மெல்ல மெல்ல சிணுங்குகிறது
ஒரு முத்தம் கன்னத்தில்
கொடுத்து விட
இதழ்களை மூடிக்கொள்கிறது
இந்தத் தேசிய பூ

நான் தேடிய பூ இவள்தான்
மெல்லிய புன்முறுவல்
சின்னஞ்சிறு அழுகை
இவளிடம் அடிக்கடி வந்து போகிறது

நான் தேடிய பூ இன்பக் கடல்
இரவு பகல் அறியாமல் மின்னுகிறது
என் வீட்டுத் தேனீக்கள்
இப் பூவைச் சுற்றி
தினம் வலம் வருகின்றன
நான் தேடிய பூ
இந்த மழலை தான்
ஜூலை மாதப் பூ
என் செல்ல மகள் சிங்காரச் சிட்டு
என்னை தினம் அழகுபடுத்துகிறாள்

**மக்கொனை நிலா**

எழுதுகோலின் கூர்முனை கொண்டு
நல்லவை விதைப்போம். அல்லவை புதைப்போம்

# ஆசிரியர் பக்கம்

அன்பார்ந்த வாசகர்களே!

வணக்கம்! (அஸ்ஸலாமு அலைக்கும்!)

இருமாத இடைவெளிக்குப் பின்பு, புதியதொரு முத்தமிழ் கலச இதழுடன் இணைகிறேன்.

இன்றைய காலத்தில் அனைவருமே தொலைபேசியினுள் தொலைந்து போயிருக்கிறோம் என்பது மறுக்க முடியாத உண்மை! இதனால் நமது வீட்டுக்குள்ளும், வெளியிடங்களிலும், சுற்றுச்சூழலிலும் நடப்பதை கூர்ந்து கவனிக்கத் தவறி விடுகிறோம். மிக முக்கியமாக நம் பிள்ளைகளின் நடவடிக்கைகளை கண்காணிப்பதில் கவனயீனமாக இருப்பதால், சமூகப் பொறுப்பிலிருந்தும் தொலைவாகி விடுகிறோம். அண்மைக்காலமாக போதைப் பொருள் பாவனை நம் இளைய சமுதாயத்தை ஆக்கிரமித்து வருவதும், அதன் தாக்கம் கற்றல் நடவடிக்கையில் மட்டுமல்லாமல், அன்றாட கடமைகளின்றும் அவர்களைப் பின்னடைய வைத்துள்ளதென்பதும் மறுக்க முடியாத உண்மை. பெற்றோர் என்ற ரீதியில், அவர்கள் யாருடன் நட்பிலிருக்கிறார்கள், ஏதும் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருக்கிறார்களா, அவர்களின் தேவைகள் என்ன, உளவியல் ரீதியாக ஏதும் சங்கடத்துக்குள்ளாகியுள்ளார்களா என்பதைக் கண்டறிந்து தீர்க்க வேண்டியது அவர்களின் தார்மீகப் பொறுப்பாகும். அன்றாடம் அவர்களுடன் கொஞ்ச நேரமாவது பேசுவதன் மூலம், மேற்குறிப்பிட்ட பல சிக்கல்களுக்குத் தீர்வினைப் பெற்றுக் கொடுக்கலாம். உங்கள் கவனம் முழுவதும் அவர்கள்பால் திரும்பும் பட்சத்தில், அவர்களின் சிறு மாற்றத்தையும் உங்களால் உணர்ந்து கொண்டு, முளையிலேயே கிள்ளி எறிந்து விட முடியும். போதைப் பொருள் பாவனையென்பது பஞ்சமா பாதகங்களுக்கும் வழிகோலக் கூடியது; இதற்கு அடிமையானால் மீள்வது கடினமானதென்பதை அவர்கள் உணரச் செய்தால், நம் இளைய சமுதாயத்தை நேர்த்தியாக வழி நடத்தலாம். அவர்களின் சிறந்த எதிர்காலத்துக்கான பாதை நம் கைகளில் தங்கியுள்ளது. இதைக் கருத்தில் கொள்வோம். போதைப் பொருள் பாவனையற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குவோம்.

நன்றி!

வ.ஃபிரா
(பிரதம ஆசிரியர்)

# கிள்ளுக்கீரையா பெண்?

**புல்லாங்குழலன்**

நண்பா உன் மனைவி அரசியலில் மேடைப் பேச்சாளராக இருப்பதில் உனக்கு ஏதும் குறையில்லையா, எனக் கேட்டான் சிலம்பரசன் தன் நண்பன் நலங்கிள்ளியிடம்.

எனக்கென்ன குறை? அவள் மேடைப் பேச்சு பட்டிதொட்டி யெங்கும் ஒலிப்பதோடு, யூட்யூபிலும் நிறைய வலம் வருகிறதே அவளைத் தெரியாதவர்களே இல்லை என்ற நல் புகழில் தானே இருக்கிறாள்.

அதற்கில்லை. உன் மனைவியோ அழகி. அவள் பொது மேடைகளில் பேசும்போது பல வக்கிரக் கண்களின் பார்வைகள் அவள் மீது பட்டுத் தெறிக்குமே என்று தான்.

பெண்களைப் போகப் பொருளாகப் பார்க்கும் பார்வைகள் பொது வெளியில் இல்லாத இடம் என்று எதையாவது சொல்லேன்.

அப்படியில்லை. மற்ற இடங்களில் சற்று நாகரிகம் பார்த்து அது மட்டுப் பட்டிருக்கும். அரசியலே ஒரு சாக்கடையாயிற்றே.

ஒருவர் இருவர் எனத் தனித்திருந்தால் தான் நீ சொல்லும் செயல்கள். பல பேர்கள் பாது காப்பாக இருக்கும் போது பொது வெளி நாகரிகம் அவர்களை தீயவற்றில் இருந்து தடுக்கும். எனக்கு அந்தக் கவலையெல்லாம் இல்லை. அவள் என்னை உருகிக் காதலித்தவள். அவளைப் பாதுகாத்துக் கொள்ள அவளுக்குத் தெரியும். நானும் அவளை மிக விரும்பித் திருமணம் செய்தவன்.

சரி நண்பா நீங்கள் நன்றாயிருக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் தான் கேட்டேன். நீ சொல்வதும் சரிதான் என்றே தோன்றுகிறது. நானும் என்றும் உனக்குத் துணையா யிருப்பேன். நான் கேட்டதை மறந்து விடு.

இந்த உரையாடல் இத்துடன் முடிந்தது. நலங்கிள்ளிக்கும் தெரியும் சிலம்பரசன் நல்ல நண்பன், பல வருடங்களாக அவர்கள் இணை பிரியா நண்பர்கள் என்பதால் புரிதல் இருந்தது.

மேடைப் பேச்சுகளின் போதும், பேட்டிகளின் போதும் மரபு மீறி சில ஆண் வல்லூறுகள் அங்கங்களை உரசுவதை கண் கூடாகக் கண்டதனால் தான் சிலம்பரசன் அப்படிக் கேட்டான்.

அரசியல் மேடைப் பேச்சு ஒன்று தாராபுரத்தில் நடந்து கொண்டிருந்தது. தங்கள் கட்சிக்கு எதிர்க்கட்சியின் பொய்ப் புரட்டு களுக்கு நெத்தியடியாக பதில்களை ஆணித்தரமாகச் சொல்லிக் கொண் டிருந்தாள் பூங்குழலி. கூட்டம்

மிக அமைதியாகக் கேட்டுக் கொண் டிருந்தது. அவ்வப்போது கைத் தட்டல்களும் இருந்தன.

கூட்டத்தின் மூன்றாவது வரிசையிலிருந்து இரு ஆண்களில் ஒருத்தன் பூங்குழலியைச் சுட்டிக் காட்டி அதோ பார் இந்த அழகி நம் கட்சியிலிருக்கிறாள். பல மேல் மட்டங்கள் இவளைத் தொடாமலா இருப்பார்கள்? என்று சன்னமான குரலில் கிசுகிசுத்தான்.

போடா போக்கத்தவனே அவளை யாரும் நெருங்க முடியாது தலைவரின் உத்திரவு.

தலைவர்?

நான் இந்தக் கூட்டத்திலேயே உன் கீழ்த்தரமான பேச்சை வெளிச்சம் போடுவேன். நீ அவ்வளவு தான் என்றாகி விடும்.

சுதாரித்துக் கொண்ட மற்றவன், நண்பா நான் சாதாரணமாகத் தான் கேட்டேன். நீ சொன்ன பதிலால் என் கருத்தை மாற்றிக் கொள்கிறேன். சரியா

சரி. இனி அப்படியெல்லாம் பேசாதே.

சரி என்று அவன் வாய் முணு முணுத்தாலும் அவனுடைய கண்கள் அவளை விழுங்கிக் கொண்டு தானிருந்தன.

சொன்னவன் பெயர் முத்தழகு. கேட்டுக் கொண்டிருந்தவன் பெயர் செந்தமிழன்.

முத்தழகு மனதிற்குள் இதை விடுவதில்லை என்ற தவறான முடிவுக்கு வந்திருந்தான். அவனை காமம் ஆட்கொண்டிருந்தது.

அவன் தன் ஆட்கள் மூவரைத் தன்னோடு சேர்த்துக் கொண்டான். அவர்களிடம் தன் தீய எண்ணத்தை விதைத்தான்.

என்ன செய்யலாம் என நினைக்கிறாய் முத்தழகு, என்றான் அதில் ஒருவன்.

கூட்டம் முடிந்ததும் அவளோடு செல்லும் கும்பலை சற்றே விலக்கிக் கொண்டு அதில் நாம் கலந்து விடுவோம்.

நாங்களும் அவளைத் தொடலாமா என்றான் முதலை வாயைத் திறப் பதைப் போல் ஒருவன். தன் வாயைத் திறந்து. முடியும் போது தொடு. ஆனால் விழிப்பாய் இருக்க வேண்டும். இந்தக் கட்சியினரின் தொண்டர் படையிடம் மாட்டினோம் என்றால் நம் உயிர் நம்முடையதில்லை. புரிகிறதா? அதே போல என்னை எந்தச் சூழலிலும் நீங்கள் காட்டிக் கொடுக்கக் கூடாது. சரியா என்றான் அவன்.

சரி. என்ற அவர்கள் கொக்கு போல சமயம் பார்த்து ஒதுங்கி நின்றிருந்தனர். கூட்டத்திலிருந்த ஒருவன் கூட்டத்தைக் கலைப் பதற்காக பாம்புகள் உள்ளே புகுந்துள்ளன என சத்தமாய் கத்திக் கொண்டு ஓடினான்.

பயந்த கூட்டத்திலிருந்து சிலர் எழுந்து ஓடினர். பேசிக் கொண்டிருந்த பூங்குழலி பேச்சை நிறுத்தி ஓடாதீர்கள் என்றாள் மைக்கில்.. இது எதிரிக்கட்சியினரின் சதி. அப்படியே அமருங்கள் என்றாள்.

இதற்கிடையே ஒருத்தன் பாம்போடு வந்தான். இதோ நான் அடித்த பாம்பு என ஒன்றைக் காட்டினான். அதற்குள் பூங் குழலியின் கட்சியினர் சிலர் அவனைப் பிடிக்க ஓடினர். அவன் வேகமாக ஓடி மறைந்தான்.

இந்தச் சூழலைப் பயன்படுத்திக் கூட்டத்திலிருந்த எதிரிக்கட்சி ஆட்கள் கூட்டத்தின் உள்ளே புகுந்தனர். மேடை அருகே இரண்டு கட்சியினரின் முரட்டு ஆட்களும் மோதிக் கொண்டிருந்தனர். இதனிடையே முத்தழகனும் அவனுடைய ஆட்களும் எளிதாகக் கூட்டத்தில் புகுந்து மேடையிலும் ஏறிவிட்டனர்.

மைக் அருகே நின்று கொண்டிருந்த பூங்குழலியை நெருங்கிய முத்தழகன் அவளுடைய இடையைத் தடவ முயற்சித்தான்.

அவனுடைய நண்பர்களும் அவளைத் தொட அருகில் வந்தனர். திடீரென முத்தழகன் ஐயோ அம்மா என்று கத்திக் கொண்டு மேடையிலேயே தொப்பென்று விழுந்தான். அவனுடைய நண்பர்களும் மூலைக்கொருவராய் தூக்கி எறியப்பட்டனர்.

முத்தழகை பிடித்துத் தூக்கி நிறுத்தி அடிக்க முயற்சிக்கலாம் என அவனைத் தூக்கினர். அவன் கை முட்டியிலிருந்து தொங்கிக் கொண்டிருந்தது. அவன் பெரும் கூச்சலுடன் கத்தினான்.

இதை தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த செந்தமிழன் அந்த இடத்திற்கு விரைந்து வந்தான். டேய் முத்தழகா உனக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும். நம் கட்சியிலிருந்து கொண்டே இந்தக் கீழ்த்தரமான செய்கையை செய்திருக்கிறாயே என அடிக்கப் பாய்ந்தான்.

பூங்குழலி அவனைத் தடுத்தாள். ஆம்புலன்ஸ் கூப்பிடுங்கள் எனச் சொல்ல அதற்கு முன்பே அங்கே பாதுகாப்பாய் நின்றிருந்த ஆம்புலன்சில் அதன் ஆட்கள் அவனை ஏற்றிக் கொண்டு சென்றனர்.

கூட்டத்தினருக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன நடந்தது. எப்படி முத்தழகின் கை உடைந்தது என்று.

முத்தழகின் நண்பர்களைப் பிடித்த செந்தமிழன், நடந்ததைச் சொல்லுங்கடா, இல்லையென்றால்.. இல்லை செந்தமிழன் சொல்லி விடுகிறோம். முத்தழகு இந்த மேடத்தின் அழகைப் பார்த்து விட்டு எங்களிடம் வந்தான். கூட்டத்தில் நாம் கலந்து அவளைத் தொட்டு விடலாம் என்றான். அவன் பேச்சைக் கேட்டது எங்கள் தப்பு தான். இனி

இந்தத் தவறை ஒரு போதும் செய்ய மாட்டோம் என அழுதனர்.

அதில் ஒருத்தன் சொன்னான், முத்தழகு லேசாக மேடத்தின் மேல் கையால் தடவினான். தடவினானா எனத் தெரியவில்லை. அவன் கை தொடுவதற்குள் மேடம் ஒரு கராத்தே வெட்டு வெட்டினார்கள் பாருங்கள். அவன் எகிறி விழுந்தான். நாங்களும் அருகில் சென்றோம். உதை பந்து போல் எங்களை மேடம் உதைக்க நாங்களும் சென்று விழுந்தோம்.மேடத்தின் மிதியில் அவன் கை உடைந்துவிட்டது. அவன் செய்த தவறுக்குக் கிடைத்த வெகுமதி இது. இனி பெண்களை நாங்கள் எந்தத் தீய எண்ணத்தோடும் நெருங்க மாட்டோம். இது உறுதி என்று அவர்கள் பூங்குழலிக்கு முன்பு மண்டியிட்டனர்.

இதோடு கூட்டம் முடிந்தது கூட்டத்தினருக்கு ஏற்பட்ட அளெகரியத்திற்கு நான் மன்னிப்பு கேட்கிறேன் என்ற பூங்குழலி இன்னொரு நாளில் நான் இங்கு வந்து பேசுகிறேன் என்று எழுந்து போனாள்.

கூட்டத்தினர் பூங்குழலியின் வீரத்தைப் பற்றியும் எதற்கும் பயப்படாத அவளுடைய தன்மை பற்றியும் புகழ்ந்து பேசிக் கொண்டே கலைந்தனர்.

பாம்புகள் என்று கத்திக் கொண்டு ஓடினானே அவன் பெயர் ரகுபதி. செத்த பாம்பை எடுத்து வந்து காட்டிவிட்டு ஓடினானே அவன் பெயர் சித்தன்.

கூட்டம் கலைந்ததும் ரகு பதியும் சித்தனும் ஓரிடத்தில் பேசிக் கொண்டிருந்தார்கள். அவங்க கட்சிக் காரன் முத்தழகு மட்டும் அங்கே வராமலிருந்தால் பெரிய கலவரத்தையே நாம்



உண்டாக்கியிருக்கலாம். எல்லாத் தையும் கெடுத்து விட்டான் அந்த கேடு கெட்டவன்.

சரி சரி பொருமாதே. அடுத்தது என்ன செய்யலாமுன்னு சொல்லு என்றான் சித்தன் ரகுபதியிடம்.

பூங்குழலியின் பேச்சு நம் கட்சியின் நடவடிக்கைகளை ரொம்ப டேமேஜ் பண்ணுதுன்னு நமக்கு மேலே இருக்கும் அண்ணன் கந்தன் சொல்லுகிறார். அவர் தானே நமக்கு படியளப்பவர். நாம் இப்ப தோத்து நிக்கிறோம்.

சரி மேலே என்ன செய்யலாம்.?

நம்ம கட்சியிலே ஒரு கராத்தே பைட்டர் சிங்காரம் இருக்காரில்லையா அவரைக் கேட்போம்.

கந்தன் சாரிடம் அவரை ஏற்பாடு பண்ணச் சொல்லிக் கேட்போம். அவரு தட்டுற தட்டுலே பூங்குழலி வாடுன பூவா உதிர்ந்திடுவா., அவர்கள் சிங்காரத்தை அழைத்துக் கொண்டு, விடியற் காலையில் பூங் குழலி ஜாக்கிங் போகும் பாதைக்குச் சென்றனர்.

அவள் போகும் பாதைக்கு நேர் எதிரே சிங்காரம் ஓடி வந்து கொண்டிருந்தான். அவள் ஒதுங்கி ஓடினாள். அவன் வழியை மறித்தான்.

வழி விடுகிறீர்களா? என்றாள் பூங்குழலி

வழி நீ தான் விடவேண்டும். மேடைப் பேச்சையெல்லாம் குறை.

அதைச் சொல்ல நீ யார்? மரியாதையாய் வழியை விடு

விடாவிட்டால் என்ன செய்வாயாம். என்றவன் அவள் மேல் கை வைக்க வந்தான். பூங்குழலி வேகமாக செயல்பட்டு அவன் கையை தட்டி விட்டதோடு அவனை ஒரு உதையும் விட்டாள். அவன் தூரத்தில் போய் விழுந்தான்.

எழுந்தவன், யாரிடம் உன் வித்தையைக் காட்டுகிறாய் எனப் பாய்ந்தவன் ஒரு கராத்தே வெட்டு வெட்டினான். அதை லாவகமாய்த் தடுத்தவள் அவனை அதே வெட்டில் நிலைகுலையச் செய்தாள். கூடவே அவள் விட்ட ஒரு உதையில் அவன் எழுந்திருக்க முடியாத நிலை ஏற் பட்டது.

அவனோடு வந்திருந்த முரடர்கள் பூங்குழலியின் மீது பாய முற்பட்டனர். எங்கிருந்தோ பாய்ந்த நலங்கிள்ளியும் சிலம்பரசனும் அந்த முரடர்களை தங்களின் பலம் வாய்ந்த குங்பூ அடியினால் வீழ்த்தினர். எல்லோரும் ஓடி மறைந்தனர். சிங்காரமும் தள்ளாடித் தள்ளாடி நடந்து போனான்.

நீங்கள் இருவரும் எப்படி இங்கு வந்தீர்கள் என்றாள் பூங்குழலி. நேற்றைய நிகழ்ச்சியினால் சிலம்பரசன் தான் இன்று எப்படியும் அவர்கள் பூங்குழலியைத் தாக்கக்கூடும் என்றான். அதனால் நாங்கள் உன் பின்னாடி ஜாக்கிங் மெதுவாக வந்து கொண்டிருந்தோம்.

உனக்கு இந்த அரசியல் வேண்டாம் பூங்குழலி என்றான் சிலம்பரசன். இல்லை அண்ணா, இதுபோல் பெண்கள் பயப் படுவதால் தான் பெண்களின் திறமை பளிச்சிட முடியாமல் போகிறது. எல்லா இடத்திலும் ஆபத்துகள் உள்ளன தான். நாம் விழிப்பாய் இருந்தால் அதை எதிர்கொள்ள முடியும். நீங்கள் கவலைப் படாதீர்கள்.

அதுமட்டுமல்ல எனக்கு என் கணவரும் அண்ணன் சிலம்பரசரும் பாதுகாப்புக்கு இருக்கின்றனர். எவ்வளவோ பேருக்கு அந்தப் பாது காப்பும் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களின் வீரம் என்னைக் காட்டிலும் சிறப்பல்லவா.

சில ஆண்கள் பெண்களைக் கிள்ளுக் கீரையாய் நினைக்கின்றனர். அப்படியில்லை உறுதியில் நாங்கள் தேக்கு மரங்கள் எனக் காட்ட வேண்டாமா என்றாள் பூங்குழலி.

சரி சரி. இன்றைய ஜாக்கிங்கை முடித்துக் கொள்வோம். எனக்குப் பசிக்கிறது. பூங்குழலி என்ன டிபன் இன்று

ரவா தோசையும் கொத்து மல்லிச் சட்னியும்.

நல்ல வேளை கொத்து பரோட்டா என்று சொல்லாமலிருந்தாயே என்றான் நலங்கிள்ளி. சிரித்துக் கொண்டே.

# சேர்க்கைகள்...!



சோலை மரக் கிளையில்
சோடிக் கிளிகள் முத்தமிட்டு
சேர்ந்து இருக்கக் கண்டேன்

காம்பின் மீதேறி நின்று
கட்டெறும்பு ஜோடி ஒன்று
காதல் செய்யக் கண்டேன்

புணர்ச்சி செய்யத் தேனீக்கள்
பூக்களையே தேடித் தேடி
பறந்து வரக் கண்டேன்

காமம் தலைக் கேறி
கலவி செய்யக் கரைக்குவரும்
கடல் அலைகள் கண்டேன்

வீண்மீன்கள் அங்கு மிங்கும்
வான் பரப்பில் சுதந்திரமாய்
விளையாடித் திரியக் கண்டேன்

ஆதவன் ஓரமாய் ஒதுங்கி
அந்திக் கடலோடு இணையும்
அஸ்தமனக் காட்சி கண்டேன்

மின்னல் வந்து முகம்காட்ட
முந்தி வரும் இடிச்சத்தம்
மழையோடு சேரக் கண்டேன்

வெண்முகிலும் கார்முகிலும்
வேட்கை கொண்டு மோதியதால்
வானிலையும் மாறக் கண்டேன்!

**கல்ஹின்னை- ஃபஹ்மி ஹலீம்தீன்**



# தக்காளி செய்கை

இலங்கையில் பயிரிடப்படும் பயிர்களில் தக்காளி மிகவும் பிரதானமானதாகும். இது சொல னேசியே குடும்பத்தை சேர்ந்த ஒரு பயிராகும்.

லைக்கோபர்சிகொன் எஸ்கியு லெண்டம் (Lycopersicon esculentum) எனும் தாவரவியல் பெயரால் அழைக்கப்படுகிறது. தற்போது செய்கை பண்ணப்படும் தக்காளி இனங்கள் செரி தக்காளியில் இருந்து உருவாகியதாக நம்பப்படுகின்றது. இதன் தாயகம் மெக்சிகோ ஆகும்.

சிறப்பாக செய்கை பண்ணும் போது அதிகளவான இலாபத்தை பெறக் கூடியதாக உள்ளதுடன் அதிகளவில் பதுளை மாவட்டத்திலேயே செய்கை பண்ணப்படுகிறது.

இலங்கையர்களிடையே தற்போது தக்காளியானது கறி சமைக்கவும், கிச்சடியாகவும் அதிகம் பயன் படுத்தப்படுகிறது. இவற்றோடு சோஸ், ஜேம், சட்னி, பேஸ்ட், தக்காளி பழச்சாறு போன்று பல்வேறு வகையாகவும் தக்கா ளியை பயன்படுத்தலாம்.

## போசணை பெறுமானம்

*கனிந்த தக்காளி பழச்சதையின் 100 கிராமில் அடங்கியுள்ள போசணைகள்*

| | |
|---|---|
| நீர் | 94 கிராம் |
| சக்தி | 20 கி.கலோரி |
| புரதம் | 0.9 கிராம் |
| கொழுப்பு | 0.2 கிராம் |
| காபோவைதரேற்று | 3.6 கிராம் |
| கல்சியம் | 48 மி.கிராம் |
| பொசுபரசு | 20 மி.கிராம் |
| இரும்பு | 0.4 மி.கிராம் |
| விட்டமின் | A (B கரோட்டின்) -35 |
| மைக்ரோ கிராம் தயமின் | 120 மைக்ரோ கிராம் |
| ரைபோபிளேவின் | 60 மைக்ரோ கிராம் |

| | |
|---|---|
| **நபாசின்** | **0.4 மைக்ரோ கிராம்** |
| **விற்றமின் சீ** | **27 மில்லி கிராம்** |

சிவப்பு நிற தக்காளியில் லைக் கொபின் எனும் நிறப்பொருள் அதிகமாக அடங்கியுள்ளது. இது புற்றுநோய் ஏற்படுத்தும் சந்தர்ப் பத்தை குறைக்கும். சமைத்த தக்கா ளியினை உண்ணுவதன் மூலம் அல்லது கொழுப்புடன் தக்காளியை உண்ணும் போது லைக்கொபின் உடலால் சிறப்பாக உறிஞ்சப்படும்.

## தக்காளி செடி வளரும் முறைகள்

கக்க அரும்புகளின் மூலம் தாவரம் தொடர்ச்சியாக வளரும் வல்லமையை அடிப்படையாகக் கொண்டு நுனி வளரும் நுனி வளராத வர்க்கங்கள் என இரண்டாக பரந்தளவில் வகைப்படுத்தலாம்.

நுனி வளரும் வர்க்கங்கள்: ஒவ்வொரு 3 இலைகளையும் அடுத்து நுனி அரும்பானது பூந்துணராக வளர்ச்சி அடையும். அச்சந்தர்ப்பத்தில் கக்க அரும்புகளின் தொழிற்பாட்டினால் தாவரம் தொடர்ந்தும் வளரும். இவ்வாறான வர்க்கங்கள் தொடர்ந்தும் வளர் வதோடு பூக்களும் காய்களும் சீராக உருவாகும். இவ்வாறான வர்க்கங்கள் பாதுகாப்பு கூடாரங்களுக்குள் பயிர் செய்வதற்கு மிகவும் உகந்தவை.

பொதுவாக இவ்வாறான வர்க்கங்களை பயிர் செய்யும் போது இலைகள் தண்டுடன் இணையும் இடத்தில் உருவாகும் கக்க அரும்புகளை அவை சிறிதாக இருக்கும் போதே அகற்ற வேண்டும்.

## நுனி வளராத வர்க்கங்கள்:

பற்றையாக வளர்ச்சி அடைவதோடு இவை திறந்த தோட்டங்களில் பயிர் செய்வதற்கு உகந்தனவாகும்.

இவ்வர்க்கங்களின் வளர்ச்சியானது ஒரு கட்டத்தின் பின் ஓய்ந்து விடும்.

## சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கங்கள்

- **கே.டபிளிவ்.ஆர் (கட்டுகஸ்தோட்ட) செடி (நுனிவளரா)**
- **ரீ. 245 (செடி)**
- **ரவி (செடி)**
- **தரிந்து (செடி)**
- **திலின (ஓரளவு நுனி வளர் கொடி)**
- **ரஜித்த (செடி)**
- **ரஷ்மி (செடி)**
- **லங்கா சவர் (கொரக்கா தக்காளி)**
- **மஹேஷி**
- **பாத்திய (நுனி வளர்)**
- **கே.சீ - 1(செடி)**
- **லங்கா செரி (கொடி/ நுனி வளர்)**

## தேவையான காலநிலை:

தக்காளி செய்கையில் சிறந்த விளைச்சலை பெற பயிரின் வெவ்வேறு வளர்ச்சி நிலை களில் உகந்த காலநிலை நிலவுவது அவசியமாகும்

பயிரின் பொதுவான வளர்ச்சி, பூத்தல், மகரந்தச் சேர்க்கை,

காய்கள் விருத்தியடைதல், நிறம், தரம் என்பவற்றோடு பயிர்களுக்கு தொற்றக் கூடிய பல்வேறு நோய்கள் என்பனவற்றில் காலநிலை அதிக செல்வாக்கு செலுத்தும்.

கடல் மட்டத்தில் இருந்து 1300 மீற்றர் வரையான உயர்ந்த பிரதேசங்களில் காலபோகம், சிறு போகம் இரண்டிலும் தக்காளியை செய்கை பண்ணலாம்.

என்றாலும் பூக்கள் உருவாகும் சந்தர்ப்பத்தில் அடை மழை பெய்யுமாயின் பூக்கள் உருவாகுவது தாமதமாகுதல், மலர்கள் உதிர்தல், மகரந்தச் சேர்க்கை குறைவாக இடம்பெறல், பங்கசு நோய்கள் தொற்றுதல் போன்ற மோசமான பாதிப்புகள் ஏற்படலாம்.

எனவே பூக்கும் காலத்தை அடை மழையில் இருந்து தவிர்த்துக் கொள்ளக் கூடியவாறு பயிர்ச் செய்கையை திட்டமிடல் வேண்டும்.

தக்காளி பயிரிற்கான மிகச் சிறந்த வெப்பநிலை 20 - 27 சதம பாகை ஆகும்.

## மண்:

சேதன பொருட்கள் நன்கு அடங்கிய மணல், இருவாட்டி மண் தக்காளி பயிர்ச் செய்கைக்கு மிக உகந்தது.பீ.எச்.5.5 - 7.5 வரை காணப்படுவது.

## பயிர்ச் செய்கை காலம்

உலர் வலய பிரதேசங்களில் கால போகத்தில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் தக்காளி பயிர்ச் செய்கையை ஆரம்பிக்கலாம்.

இதனால் விளைச்சலை பெப்ரவரி, மார்ச் மாதங்களில் சந்தைப்படுத்தலாம்.

உலர் வலயத்தில் சில தக்காளி வர்க்கங்களை இரண்டு போகத்திலும் செய்கை பண்ண முடியாது. ஏனெனில் கால போகத்தில் அதிக வெப்ப நிலை நிலவுவதால் தக்காளியை செய்கை பண்ணுவது விளைச்சலில் பாதிப்பை ஏற்படுத்தும்.

மாத்தளை, கண்டி போன்ற மாவட்டங்களில் தக்காளி பயிர்ச் செய்கை ஜுன், ஜுலை மாதங்களில் ஆரம்பிக்கப்பட்டு ஆகஸ்ட் செப்டம்பர் மாதங்களில் சந்தைப்படுத்தப்படுகின்றது.

பதுளை மாவட்டத்தின் வெலிமடை, பண்டாரவளை போன்ற பிரதேசங்களில் வருடம் முழுவதும் தக்காளி செய்கை பண்ணப்படுகிறது. மேலும் சந்தையில்



தக்காளி பற்றாக்குறை நிலவும் நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் கூடிய விலை பெறுவதற்காக செப்டம்பர், ஒக்டோபர் மாதங்களில் ஆரம்பிக்கப் படுகிறது.

## தேவையான விதை:

ஒரு ஹெக்டயர் நிலப்பரப்பில் ஒரு குழியில் ஒரு நாற்று வீதம் நடுவதற்கு 200 - 250 கிராம் விதைகள் தேவைப்படும்.

ஒரு ஏக்கருக்கு 75 - 100 கிராம் விதைகள் தேவைப்படும்.

## நாற்று மேடை பராமரிப்பு:

தோட்டத்தில் நடுவதற்கு ஆரோக்கியமான வீரியமான நாற்றுகளை பெறுவதும் நடுகை செய்யப்பட்ட பின்னர் நாற்றின் வளர்ச்சி பாதிக்கப்படாமல் இருப்பதும் பயிர்ச் செய்கை வெற்றி அளிப்பதற்கான முக்கிய காரணிகளாகும். எனவே தக்காளி பயிர்ச் செய்கையின் போது நாற்று மேடை பராமரிப்பில் விசேட கவனம் செலுத்துவது முக்கியமாகும்.இதற்கு பல வகையான நாற்று மேடை முறைகளை பயன்படுத்தலாம்.

பாத்தி நாற்றுமேடை (ஒரு மீற்றர் அகலமான மூன்று மீற்றர் நீளமான 15-20 சென்ரி மீற்றர் உயரமான பாத்திகளை அமைத்தல் வேண்டும்)

சிறுதுண்ட / நொரிடோக்கோ நாற்று மேடை ( 5* 5 சதுர மீற்றர் அளவுள்ள மண்துண்டங்கள் போதுமானது)

பொதி நாற்று மேடைகள் (யோக்கட் கோப்பை, தேங்காய் சிரட்டை, வாழை இலை/ வாழை மடல், கடதாசி/ பொலித்தீன் உறை, நாற்று மேடை தட்டு (ஸ்டைரபோம் ரெஜிபோம்), பிளாஸ்டிக் பாத்திரம், தென்னை உரி மட்டை)

## நடுகை இடைவெளி

நுனி வளர், நுனி வளரா இனங்களுக்கு - 80*50 சதம மீற்றர் (cm) என்றாலும் பரந்து வளரும் நுனி வளராத வர்க்கங்களுக்கு 80*80 சதுர மீற்றர் மிகவும் பொருத்தமாகும்.

நுனி வளர் வர்க்கங்களில் கணுக்களை அகற்றுவதனால் குறைந்த இடைவெளியினை வழங்கலாம்.

## நாற்று நடுதல்

பொதுவான நாற்று மேடைகளில் உற்பத்தி செய்யப்பட்ட நாற்றுக் களை 14-18 நாட்களில் பிடுங்கி நடவும்.

## களைக்கட்டுப்பாடு:

தக்காளி பயிர்ச் செய்கையில் நாற்று நட்டு 03 வாரங்களிலும் 06 வாரங்களிலும் களைகளை கையால் பிடுங்கி அகற்றவும். களைகளை பிடுங்கும் போது வேர்களுக்கு பாதிப்பேற்படாமல் கவனமாக மேற்கொள்ளவும்.

தக்காளி பயிர்ச் செய்கையில் நாற்றினை நடுகை செய்த பின்னர் நாற்றுகளுக்கு இடையில் வைக்கோல் போன்ற பொருட்களை பத்திரக் கலவையாக இடுவதனால் களை களையும் நன்கு கட்டுப்படுத்தலாம்.

## பசளை இடல்:

தக்காளி பயிர்ச் செய்கையில் உயர் விளைச்சலை பெற்றுக் கொள்வதற்காக சேதன பசளை களையும் இரசாயன பசளைகளையும் சிபாரிசு செய்யப்பட்ட அளவில் கட்டாயம் இடவும்.

## மண்ணிற்கு சுண்ணாம்பிடல்:

ஈர, இடை வலய பிரதேசங்களில் ஏனைய மரக் கறிகளைப் போன்றே தக்காளி பயிர்ச் செய்கையின் போதும் மண்ணின் அமிலத் தன்மையை கட்டுப்படுத்தல் அவசியமாகும்.

இதற்கு பொதுவாக சுண்ணாம்பு அல்லது டொலமைற்றை ஒரு ஏக்கருக்கு 800 கிலோ கிராம் (ஒரு ஹெக்டயரிற்கு 2000 கிலோ கிராம்) இடல் வேண்டும்.

உலர் காலநிலையில் சுண்ணாம்பு அல்லது டொலமைற்றை இட்டால் நீர்ப்பாசனம் செய்வது அவசியமாகும். ஏனெனில் அதன் செயற்பாட்டுக்கு நிலம் ஈரமாக இருப்பது அவசியமாகும்.



இவ்வாறு சுண்ணாம்பு/ டொலமைற் இட்டு இரண்டு வாரங்களின் பின்னரே அடிக்கட்டு பசளை இட வேண்டும். இதனால் இரசாயன பசளைகளுடன் சுண்ணாம்பு இடைத்தாக்கம் இடுவதனை தவிர்க்கலாம். மேலும் மண்ணின் அமிலத் தன்மையை குறைப்பதற்கும் இந்த கால இடைவெளி போது மானதாகும்.

## சேதன பசளைகளை இடல்:

தக்காளி பயிருக்கு சேதன பசளைகளை இடுவது மிக முக்கிய மாகும். இதற்காக நன்கு உக்கிய மாட்டெரு, கூட்டெரு, கோழி உரம், ஆட்டெரு பயன்படுத்தலாம்.இவற்றில் கோழி உரம் தக்காளி செய்கைக்கு மிகவும் உகந்தது

ஒரு ஏக்கருக்கு 40-50 கிலோகிராம் கொண்ட 80-100 மூடைகள் தேவைப் படும். இதன் அளவு 04 தொன் ஆகும். இதன் மூலம் அதிக விளைச்சலையும் பெரிய பழங்களையும் பெற முடிவதுடன் நெமற்றோடுகளினால் ஏற்படும் வேர் முடிச்சு நோயினையும் குறைக்கலாம். நாற்றை நட 05; நாட்களுக்கு முதல் குழிகளில் இட்டு 02 நாட்களுக்கு ஒரு தடவை நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

## விளைச்சல்:

- 20-60மெற்றிக்தொன்/ஹெக்டேர்.
- 4-12 கி.கிராம் / ஒரு தாவரம்.

**ஆக்கம்:**

**மு.ஹ.முர்ஷிதா ஷிரீன்**

**விவசாய போதனாசிரியர் (ஏறாவூர்)**

**சம்மாந்துறை, இலங்கை**



## படித்ததில் பிடித்தது

தினமும் ஒரு இளைஞன், அதிகாலை வேளையில் தினசரி பேப்பர் போடும்போது ஒரு வீட்டில் அதற்காக ஒரு போஸ்ட் பாக்ஸ் போல ஒரு பெட்டி காம்பவுண்ட் கேட்டில் இருக்கும். பேப்பர் போடும் பையனும் தினமும் அதிலேயே பேப்பர் போட்டுக் கொண்டு வந்திருந்தான்.

திடீரென ஒரு நாள் அந்த பெட்டியைக் காணவில்லை. காலிங் பெல்லை அழுத்தி பார்த்த போது ஒரு வயோதிகர். எண்பது வயதிருக்கும். மெதுவாக பெரியவர் வந்து கதவை திறந்தார்.

இளைஞனும் அவரிடம், 'வாசலில் இருந்த பாக்ஸ் எங்கே ஐயா' என்று கேட்டான்.. பெரியவரோ, 'தம்பி நான் தான் அந்த பெட்டியை நேற்று எடுத்து விட்டேன். நீ தினமும் என்னை அழைத்து பேப்பரை என் கையிலேயே கொடுத்து விடு' என்றார்.

இளைஞனோ! 'ஐயா அது உங்களுக்கும் நேரம் எடுத்து கொள்ளும், எனக்கும் நேரம் அதிகம் செலவாகும், காலையிலே பல இடங்களுக்கு சென்று பேப்பர் போடுவதால் அதில் எனக்கு நேரம் கூடுதலாக செலவாகும், ஆகவே நீங்கள் மறுபடியும் அந்த பெட்டியை இருந்த இடத்திலேயே வைத்தால் நன்றாக இருக்கும்' என்றான்.

பெரியவரோ 'தம்பி, பரவாயில்லை. நீ என்னை அழைத்து கையில் பேப்பர் கொடுத்து விட்டு போ. வேண்டுமென்றால் நான் கூடுதலாக 500 ரூபாய் ஒவ்வொரு மாதமும் தருகின்றேன்' என்றார்.

இளைஞனுக்கு ஒன்றும் புரிய வில்லை! அவரிடமே காரணத்தைக் கேட்டான்.

அதற்கு பெரியவர், 'தம்பி சமீபத்தில் என்னுடைய மனைவி காலமாகி விட்டாள். நான் தனியாவே இருக்கின்றேன். எனது பிள்ளைகளெல்லாம் வெளிநாட்டில் இருக்கின்றார்கள். என் மனைவி நெடுநாட்களாக மரண படுக்கையில் நோயாளியாகவே இருந்து இறந்து போனாள்.

நான் பெற்று வளர்த்த பிள்ளைகளெல்லாம் அவள் நோயாக இருந்த போதே கொஞ்சம் கொஞ்சமாக போனில் பேசுவதை நிறுத்தி விட்டார்கள். என் மனைவியின் மரணத்திற்கு கூட யாரும் வரவில்லை.

நான் கஷ்டப்பட்டு வளர்த்த பிள்ளைகளுக்கும் நான் பாரமாகி விட்டேன். நீயாவது தினமும் வந்து என்னை அழைத்து பேப்பர் தந்தால் நான் இன்னமும் உயிரோடு தான் இருக்கின்றேன் என்று அக்கம் பக்கம் உள்ளவர்களுக்கும் புரியும்.

ஆரம்ப காலங்களில் என் சந்தோஷம், என் தனிமை என சுய நலமாகவே சிந்தித்து அக்கம் பக்கத்தினர் வலிய வந்து அவர்களாகவே அன்பாக பேசிய போதெல்லாம் ஏதாவது உதவி கேட்பார்கள் என நானாகவே நினைத்துக் கொண்டு, ஒரு கட்டத்தில் அதை தொந்தரவாக நினைத்தும் காம்பவுண்ட், கேட் என போட்டு அவர்கள் வருவதை முற்றிலும் தடுத்து விட்டேன், யாரெல்லாம் எனது நெருங்கிய சொந்த உறவுகள் என நினைத்தேனோ அவர்கள் எல்லாருமே துக்கம் விசாரித்ததோடு கடமைக்கு என வந்து போனார்கள்,

ஆனால் யாரெல்லாம் வரவேக் கூடாது என நினைத்தேனோ அந்த அக்கம் பக்கத்தினர் தான் என் மனைவியின் இறுதி சடங்கில் இறுதி அடக்கம் வரையில் எந்த பலனும் எதிர்பாராமல் இருந்து உதவினர், இப்போது நானும் வயோதிகன் என்பதால் பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் கூட என்னோடு பாசத்தோடு சிநேகம் வைத்துக் கொள்வதில்லை. காரணம், பணம் அந்தஸ்து உயர்ந்த நிலையில், நான் இருந்தபோது வலிய வந்து அன்பாக உறவு கொண்டாடிய அந்த நல்ல உள்ளங்களை மதிக்கத் தெரியாமல் தடுத்த என்னால் எந்த விதமான நன்மையும் வராது என்றும் தான் அவர்களும் என்னை தொடர்பு கொள்வதில்லை. ஒரு வேளை நீ பேப்பர் போட தினமும் என்னை அழைக்கும்போது, நான் வரவில்லை என்றால் நான் அன்று இறந்து விட்டேன் என தீர்மானித்து விடு! உடனே அக்கம் பக்கம், போலீஸை அழைத்து சொல்லி விடு!

அப்புறம் தம்பி என்னுடைய பிள்ளைகளின் வாட்ஸ்அப் நம்பரும் தருகிறேன், ஒரு வேளை நான் இறக்கும் போது தயவு செய்து என் பிள்ளைகளுக்கு வாய்ஸ் ரெக்கார்ட் மூலம் என் மரண செய்தியை சொல்லி விடு‘ என்றார்.

இதையெல்லாம் கேட்ட அந்த இளைஞனுக்கு கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் வந்தது, சொல்லிக் கொண்டிருந்த பெரியவருக்கும் குரல் தழுதழுத்தது.

இன்றைய நவீன உலகில் தனித் தீவாக உள்ள வீடுகளிலும் ஒவ்வொரு அப்பார்மெண்டிலும் இந்த மாதிரி முதியோர்கள் இருக்கத் தான் செய்கின்றார்கள்

*சில முதியோர்கள் வாட்சப்பில் தினமும் குட்மார்னிங் என்றும் வணக்கம் என்றும் அனுப்பும் போதெல்லாம், இந்த பெரிசுக்கு வேற வேலையில்லை, இது ஒரு தொல்லை தான் என்று நினைத்து பலரை நானே பிளாக் செய்துள்ளேன்.*

*இப்போது தான் அதன் உள் அர்த்தமே புரிகின்றது. அவர்களெல்லாம் தனிமையில் வாடுகின்றவர்கள், அன்பிற்காக ஏங்குகின்றவர்கள்.*

*கேட் வாட்ச் மேன், நான்கு வீடுகள், நான்கு கார்கள் என இருக்கும், ஆனாலும் கூட பேச்சுத் துணைக்கு யாருமில்லை! யாரிடமும் பேசாமல் தனிமையில் இருந்து, அந்த துக்கத்திலேயே மரணத்தை தழுவியவர்கள் பலர்.*

*ஒரு வேளை அவர்கள் நமஸ்காரம், குட்மார்னிங் என்று மெசேஜ் அனுப்புவதே, தான் உயிரோடு தான் உள்ளேன் என்பதை மற்றவர்களுக்கு உணர்த்ததான் என்றும் இப்போது நினைக்கின்றேன்.*

*பச்சை இலைகள் ஒன்றை மறந்து விட வேண்டாம், நாமும் பழுத்த இலைகள் ஆகி மரத்திலிருந்து ஒரு நாள் உதிர்ந்து விடுவோம் என்று.*

மகிழாவின் முகநூல் பக்கத்தில் இருந்து

**லதா பாபு**

# பிணைப்பு

**காதுகளில் ஒலிக்கும்
புள்ளினங்களின் மொழிகள்
உந்தன் கடவுச்சொல்.
கண் சிமிட்டும் பூக்களின்
மகரந்த அன்பு
உன் நயன தீட்சை.
நேசக் கிளைகளின்
பிடிமானத்தில்
தாலாட்டும் தென்றல்
உந்தன் மௌனம்.
சருகின் அடைக்கலமாய்
உன் வேர்களில் என்
பிணைப்பு**

**மலர்மகள்**
**மதுரை**

# இறைவேதம்

**உம்மை அவர்கள்
பொய்ப்படுத்தினால் எனது
செயல் எனக்கு; உங்கள் செயல்
உங்களுக்கு.
நான் செய்வதை விட்டும்
நீங்கள் விலகியவர்கள்.
நீங்கள் செய்வதை விட்டும்
நான் விலகியவன் என்று
கூறுவீராக.**

**(அல்குர்ஆன் 10:41)**

**பானு ஜிப்ரி**
சாய்ந்தமருது

# எண்ணத் திரையில்

மின்சாரமற்றுப் போன
ஒரு முன்னிரவில்
பிள்ளைகள் இரண்டும்
தட்டுத் தடுமாறி
பெருங்குரலோடு என்னிரு
கால்களையும் பிடித்துக்
கொண்டன

இருளின் வெளிச்சத்தில்
இரவு கருகருவென
வளர... வளர
அவர்களின் விசும்பலொலி
என் காதுகளை
மெல்லக் கவ்வி உயருகையில்

சட்டெனக் கண்ணாடி வளையலில்
பட்டு முகத்தில் தெறிக்கும்
ஓர் இளஞ்சிவப்புப்
பேரொளியை
கரங்களில் ஏந்தி வரும்
அவளைப் பார்த்ததும்-என்
நிலவுகள் இரண்டும்
முந்தானைக்குப் பின்
பிரகாசிக்கின்றன

தரையில் கொட்டி விட்ட
நட்சத்திரப் புன்னகையின்
நிழலில்
நீங்காமல் நிழலாடுகிறது
என் அம்மாவோடு அப்பாவின்
பிம்பம்
நாசித் துவாரங்களில்
அப்பிக் கிடக்கும்
மசியின் நினைவு
வண்ணத்திரையாக
ஒளிப்பரப்பாகிறது
என் எண்ணத்திரையில்

கவிஞர்.விசித்திரக்கவி

# காலைப் பொழுது

ஆறாத ரணங்கள்- என்
இதயம் சூழ்ந்ததும்- உன்
மடி தேடி ஓடி வருகின்றேன்
என் தலை சாய்த்திட

கண்களில் நீர்
ஊற்றெடுத்ததும்- உன் அமைதி
சுமக்க ஓடிவருகின்றேன
என் மனதை புதைத்திட

இருட்டின் அணைப்பில்
இறுகிப் போன இதயத்தை.
ஈன்றெடுக்க வரும்
வெளிச்சச் சுடரே!

உன் அழகின் வதனத்தை
தினம் தோறும் அனுபவிக்க
மீண்டும் மீண்டும்- நான்
உயிர் துறந்து விழிக்கின்றேன்

உன்னை அடைந்ததும்- என்
தூக்கங்கள் கரையும்உன்னை
ரசித்ததும்- என்
கவலைகள் துச்சமாகும்

உன் காலைப் பொழுதினில்
கரைந்தோடி இணைகின்றேன்
என் உணர்வுகளில் கலந்த
உனதழகினில் மயங்கியே!

மின்னத் ஸறா பஹஸ்





# மனித மூட்டை பூச்சிகள்

*நஞ்சு நிறைந்த நாகம்*
*போல் நெஞ்சுக்குள் வஞ்சம்*
*கொண்டவர்கள் இவர்கள்*
*மற்றவர்களை அழித்தொழிக்க*
*மறைந்திருந்தே மாயம் செய்யும்*
*மனித மிருகங்கள்*

*மனப்பூமியெங்கும்*
*விஷப்பயிர் விளைத்து*
*வில்லங்கம் செய்யும் வித்தகர்கள்*

*காக்காய் பிடித்து*
*தன் காரியத்தை முடிப்பதற்கு*
*மூட்டிக் கொடுத்து*
*மொள்ளமாரி வேலை செய்து*
*மகிழ்ச்சி காணும் மாவீரர்கள்*

*ஒட்டைக்குள் ஒளிந்திருந்து*
*ஒருதலையாய்த் தலை நீட்டி*
*தாக்கித் துன்புறுத்தும்*
*தைரியமற்ற*
*மனித மூட்டைப்பூச்சிகள்*

**ஹாஜறா கலீலுர் ரஹ்மான்**
**காத்தான்குடி**

# நெசவுத் தொழிலாளர்

**இருகரங்கள் இழுத்து**
**இருகால்கள் அசைத்திடுவர்**
**அல்லும் பகலும் தொடர்ந்து**
**உழைத்திடுவர்**
**பஞ்சை நூலாக்கி**
**ஆடைகள் நெய்திடுவர்**
**எண்ணற்ற வண்ணங்களில்**
**புடவைகளும் செய்திடுவர்**

**எழில்மிகு கைலிகளையும்**
**நேர்த்தியுடன் செய்வர்**
**நெசவாளர் கைவண்ணத்தில்**
**நெய்த பட்டாடைகள்**
**பாரம்பரியம் மாறாமல்**
**புதுமைகளைப் புகுத்திடுவர்**
**பண்பாடு குறையாமல்**
**நேர்த்தியாய் நெய்திடுவர்**

**கைத்தறியின் ஓசை**
**அகிலமெங்கும் கேட்டிடட்டும்**
**உடையளிப்பவன் நெசவாளி**
**கைத்தறியை ஆதரிப்போம்**
**நெசவாளர்களுக்கு நாமும்**
**ஆதரவு நல்கிடுவோம்**
**கைத்தறி ஆடைகள்**
**உடைகள் வாங்கி மகிழ்வோம்**

**கலைநயத்தோடு தரமானதாய்**
**ஆடைகளை செய்திடுவர்**
**மனிதரின் மானங்காக்க**
**அயராது உழைப்பவர்கள்**
**கலைநயத்தோடு தரமானதாய்**
**நெசவினை செய்திடுவர்**
**இந்தியப் பாரம்பரியம்**
**நெசவாளர்களின் இதயத்துடிப்பாகும்**

**கவிஞர் இரா.சீ .பாலகுமார்.M.A**
சந்தோசபுரம்.சென்னை -600073.

கவிதைக் குறுங்கதை

# மூன்று முகங்கள்

நானும் ஒருகாலத்தில்
தந்தையாகத்தான் இருந்தேன்.
இப்போ பாட்டனாகி பழையதை
இரை மீட்டுகின்றேன்.

தந்தையாக ஆகுமுன் மகனாகவும் இருந்தேன்.
மகனாக இருந்தபோது தந்தையின் தியாகங்களை
எண்ணிப் பார்க்கவில்லை.
வேண்டியதை வேண்டும்போது
வேண்டுமென அடம்பிடித்தேன்.
அது கிடைக்காதபோது வேண்டிய அளவுக்கு
தந்தையை மனசுக்குள் திட்டினேன்.



பணக்கார மகன்களின் தந்தைகளைப் பார்த்து
எனது தந்தையை இளக்காரமாக நோக்கினேன்.
உழைக்கத்தெரியாத மனிதர் என
உள்ளுக்குள் நொந்துகொண்டேன்.
அப்பா அரச உத்தியோகத்தனல்ல.
உழைப்பதையே தொழிலாய் கொண்ட விவசாயி.
வியர்வை சிந்தி தோட்டத்தில்
உழைத்தாலே காசு பணம்.
அதிலேதான் எமக்கு ஒருநேரச் சோறு. கள்ளமில்லை,
கையூட்டு இல்லை அவரது உழைப்பில்,
வாழ்க்கையில் என்பதை இப்போது
நினைக்கும்போதே
தேகம் புல்லரிக்கின்றது.

எனது நண்பனின் தந்தையோ
அரச அதிகாரி. மாதச் சம்பளம்.
ஆனாலும் நாளாந்த சம்பளங்கள்
அவருக்கு அதிகம்.
கேட்டுச் சில, கேளாமல் பலப்பல.
மாளிகை வாசம். வாகனங்கள்.
வகைவகையான உணவுகள் அவனுக்கு.
வேளைக்கொரு உடுப்பு.
விரும்பிய சாப்பாட்டுவகை.
வெய்யில் படாத நிழல் வாழ்க்கை.
உல்லாசப் பிரயாணங்கள்.

எனக்கோ குடியிருப்பு குடிசையில்.
குடிக்க வெறும் தேனீர் மட்டுமே.
பசிக்கும். ஆனால் பாற்சோறும்
இடையிடை பாணும் சம்பலுமாய்.
தந்தையை அலுத்துக்கொண்டேன்.
காலில் செருப்பில்லா கால்நடை
பள்ளிப்பயணம் நித்தம் மூன்று மைல்கள்.
அதிகாலை ஐந்துக்கே
எழுந்திட வேண்டும் எந்தக் குளிராகட்டும்.
வெங்காயம் புகையிலைத் தோட்டங்களில்

துலாவில் நீரிறைப்பு. அண்ணன் துலாமிதிக்க
அப்பா நீரிறைக்க நான் பயிர்களுக்கு
மாறிமாறி நீர்கட்டிக் களைத்துப்போக.
காலை வெறுந்தேனீரை உள்ளுறுஞ்சி
நேரம் ஏழைத்தாண்ட பள்ளிக்கு
அவசரமாக இருந்த ஒரே காற்சட்டை
சேட்டை மாட்டிக்கொண்டு
புத்தகம் கொப்பிகளை கையிலெடுத்தபடி
காலிலே செருப்புமின்றி ஓட்டமும் நடையுமாக.
அப்பப்பா...பிந்தினால் கேற்றைப்பூட்டி
வெளியில் விட்ட நாட்கள் எத்தனையோ.
பணமற்றதால் பாடசாலைகளிலும் புறக்கணிப்புக்கள்.



ஆனால், தந்தை ஆனதும்
எனது பிள்ளைகள் என்னைப்போன்று
துன்பங்களை அனுபவிக்கக்கூடாதென்ற மனநிலையில்
நான். எனது பிள்ளைகளுக்கு பள்ளிக்குப் போக ஓட்டோ.
காலுக்கு சப்பாத்து. நாளுக்கொரு சீருடை.
கைச் செலவுக்குக் காசு. தோட்டந்துரவு போகாத
அரச உத்தியோகம் எனது.
நாளாந்தம் பிள்ளைகளின் ரியூசன் வகுப்புகளுக்கு
விடுமுறை நாளென்றும் பாராமல் கொண்டுசென்று\
களைத்த நாட்கள் அதிகம்.

மதியம் உணவுகூட பலவேளைகளில் இரவில்
எட்டுமணியை தாண்டியபின்னால்.
இதை உணர்ந்த பிள்ளைகள்
ஒரு சிலராக. இது நவீன காலமிது.
ஆண் பிள்ளைகளோ பெண்பிள்ளைகளோ
படித்திருக்கவேண்டும்.
அவரவர் சொந்தக்காலில் சுயமரியாதையுடன்
வாழ்க்கையை கொண்டுசெல்ல
ஆண்களைவிட பெண் பிள்ளைகளுக்கு
கல்வி தேவை. பதவி தேவை.கையிலே காசுதேவை.
இதுவோர் தந்தையின் ஆதங்கம்.

தந்தையின் ஸ்தானம் நாமும் தந்தையர்
ஆனபின்னாலேயே உணரப்படுகின்றன.
அவர்களின் கனவுகளோ பிள்ளைகளின் நல்ல எதிர்காலம் பற்றியதே.
தனக்கென உடையோ ஏன் கால் செருப்பைக்கூட வாங்காது
பிள்ளைகளுக்காய் கையிலிருக்கும் பணத்தை செலவுசெய்வது
நல்ல தந்தையர் குணம். பிள்ளைகளின் எதிர்காலம்
வாழ்க்கை பற்றியதான கனவுகளுடன்
காலந்தள்ளி வாழ்ந்தாலும் சில வேளைகளில்
அந்தப்பிள்ளைகளாலேயே புறக்கணிக்கப்படுவதும்
வேதனையோ வேதனைதான்.

பிள்ளைகளின் வாழ்வுபற்றியதான கனவுகளுடன்
தியாக வாழ்வு வாழ்ந்த பல தந்தையர்களின் கனவுகள்
பல கண்ணீர் கதைகளாவது
காலத்தின் கொடுமை. மகன்கள் தந்தையர்கள் ஆகும்போது
தமது தந்தையர்களின் தியாகங்கள் அவர்களின்
தன்னலமற்ற கனவுகள் பற்றி தேடல்கள்
மகன்களுக்கு நிச்சயம் மனசில் நிழலாடும்.
ஆமாம் நான் பாட்டனாகிவிட்ட இந்தக் கணத்திலும்
எனது ஏழைத் தந்தை எமக்காகக் கண்ட கனவுகளோ

சில நிறைவேறியும் நிறைவேறாமலும் போனதும்
நெஞ்சை உறுத்துகின்றது.
ஒரு தந்தையைப்பற்றி தந்தையாகி அனுபவங்களை
உள்வாங்கும் சில மகன்களாலேயே உணரப்படுகின்றன.
ஆனால் சில வேளைகளில் மகன்கள் தந்தையாகி
தமது தந்தையை உணரும் போது
அந்தத் தந்தைகள் வாழ்வும் காலத்துள்
கரைந்து கண்களில் கண்ணீரை வரவழைக்கின்றன.

தந்தையர் கனவுகள்
பரம்பரையாக கடத்தப்படுகின்றன.
சில நனவாகின்றன. பல வானவில்போல்
கணத்தில் தோன்றி மறைந்தே விடுகின்றன.
அப்பாக்களை தேரிலேற்றி வடம்பிடித்து
இழுக்க காத்திருக்கும் பிள்ளைகளே
உங்கள் காரும் வேண்டாம் தேரும் வேண்டாம்
ஒரு நேர உணவையாவது உண்டு
நிம்மதியாக உறங்க
உங்கள் வீடுகளில் ஓரிடத்தை
வழங்கினால் போதும்
பெரிய எதிர்பார்ப்புகள்
தந்தையரிடம் ஏதுமில்லை.
அவமரியாதைகளும் வேண்டாம்
அதிக மரியாதைகளும் வேண்டாம்.
தோளில் சுமந்து வளர்த்தவரை
அவர் வீழுமுன் கையேந்துங்கள்!
.
நாளை நீங்களும் அப்பாக்கள்.
நீங்கள் எதை விதைக்கிறீர்களோ
அதையே அறுவடை செய்ய
காத்திருங்கள்!

**ஷெல்லிதாசன்...**
திருகோணமலை.



# முளைக்காத விதை

விதைகள் பல்லாயிரம்,
முளைக்கட்டும் - நிலத்தினிலே
பல விதை முளைத்ததுவே உன்னை -
(விதை) நிலம்தான் ஏற்றதுவே -
ஏன் இன்னும்
முளைகட்டவில்லை நீ

இருளுக்கு அஞ்சியதால் - நீ
முளைக்காமல் விட்டாயா- இல்லை
நிலம் தான் மலடென்று
குறைகண்டு விட்டாயா,
காரணம் தான் புரியவில்ல
காலம் தான் போகுதே,

நிலம் பார்த்து உழுது
விதைத்திட்ட, முளை
முளைக்காமல், போயிற்றே!
முளைக்காத விதைக்கு
முள்வேலி - எதுக்கு
விதைகள் உறங்கலாம்
விதைத்தவன் உறங்கலாமா

நீ விதையாக இருந்து
முளையாக மாறி
செடியாக இருந்து கொடியாக வா
உனைப் பாதுகாக்க பந்தக்காலாக
உன் பக்கத்திலே -
நான் இருப்பேன்
உனக்கு உறுதுணையாக
பனைஓலை கொத்தும் வைத்து
கரிசனையாய் பார்த்திடுவேன்
உன் வரவுக்காய் காத்து நிற்கிறேன்

என் வீட்டு முற்றம் உன்
வருகைகாய் காத்திருக்கு
உன் பிரசவம் தான் எப்போ
பூங்கொடி -நீ
தளிர் விட்டு வெளியே வா உன்னை
தேனீக்கள் சுற்றும்
வண்ணத்துப்பூச்சிகளும் வட்டமிடும்
- உன்னை

நீ ஆவாரையா, வாகையா,
நித்திய மல்லியா
பவளமல்லிக் கொடியா - நீ
எதுவாயினும்
என் குறை போக்கிடு
முளைத்து வா என் முத்தாரமே

**மீராநகர் றிப்கா**

# அன்பாளன்

*எத்தனை பிரார்த்திப்புகளும்*
*மறுப்பின்றி ஏற்றுக்*
*கொள்ளப்படும்*
*எத்தனை பாவங்களும்*
*எதிர்பார்ப்பின்றி மன்னிக்கப்படும்*
*எத்தனை பரிதவிப்புகளும்*
*தாமதமின்றி தாங்கிப்பிடிக்கப்படும்*

*எத்தனை தண்டனைகளும்*
*கால நேரங்களில்*
*நிறைவேற்றப்படும்*
*எத்தனை பிரச்சினைகளும்*
*தீர்மானங்களோடு தீர்த்து*
*வைக்கப்படும்*
*ஏகனின் அருளால்*
*ஏகமானதாய் எல்லாம்*
*கண்காணிக்கப்படும்*

*தவறிழைத்தால் மன்னிப்பையும்*
*தண்டிக்கப்பட்டால் மீட்சியையும்*
*தாமதமின்றி கேட்கையில்*
*தாராளமாய் தயவு காட்டிடுவான்*

**ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான்**
**புல்மோட்டை**

# செல்லுலைட்டிஸ்

## எனப்படும் தோல் கிருமித்தொற்றும் நிவாரணமும்



**Dr ஜலீலா முஸம்மில் MBBS SL**
சிரேஷ்ட வைத்திய அதிகாரி
ஆதார வைத்தியசாலை, ஏறாவூர்

செல்லுலைட்டிஸ் என்பது மனித தோலின் மேற்பரப்பிற்கு அடியில் தொடங்கும் ஒரு பக்டீரியா தோல்த் தொற்று ஆகும், இது சரியான நேரத்தில் சிகிச்சையளிக்கப் படாவிட்டால் விரைவாக உடலுக்குள் பரவி தீவிரமான நோய்த்தொற்றை ஏற்படுத்தக் கூடியது. இது உடலின் எந்தப் பகுதியிலும் ஏற்படலாம் என்றாலும், கால்களையே கூடுதலாக பாதிக்கிறது. செல்லுலைட்டிஸின் ஆரம்ப அறிகுறிகளைக் கண்டறிந்து உடனடி சிகிச்சையை நாடுவது மிக முக்கியமானது. இதனால் கடுமை யான உடல்நல சிக்கல்களையும், உயிருக்கு அச்சுறுத்தலாக இருக்கும் சிக்கல்களையும் தடுத்துக் கொள்ள முடியும்.

பாதிக்கப்படும் பகுதி பொதுவாக கால்களாக இருப்பினும், இத்தொற்று முகம், மேல் கைகள் மற்றும் உடலின் பிற பகுதிகளிலும் ஏற்படலாம். இது உடனடியாக சிகிச்சையளிக்கப்பட வேண்டிய ஒரு தொற்று . ஏனெனில் இது தோல் மேற்பரப்பிற்கு அப்பால் நீட்டிக்கப்பட்டு நிணநீர் மண்டலம் மற்றும் குருதிச்சுற்றோட்ட அமைப்பு ஆகியவற்றிலும் பாதிப்பு ஏற்படுத்தக்கூடியது.

பக்டீரியாக்கள், பொதுவாக தோலில் ஏற்படும் காயங்கள், வெடிப்புகள், வெட்டுக்கள் போன்ற விரிசல் வழியாக உடலுக்குள் நுழையும் போது செல்லுலைட்டிஸ் ஏற்படுகிறது. இந்த நுழைவு வாயில் வெட்டு, தீக்காயம், பூச்சி கடி, அறுவை சிகிச்சை காயம் அல்லது எக்ஸிமா அல்லது தடகள கால் போன்ற தோல் நோயால் பாதிக்கப்பட்ட பகுதியாக இருக்கலாம். உள்ளே நுழைந்தவுடன், பக்டீரியா விரைவாகப் பெருக்க மடைந்து, சிவப்பு நிற மாற்றம் மற்றும் வீக்கத்தை ஏற்படுத்தும்.



## வகைகள்

1. குழு A - ஹீமோலிடிக் ஸ்ட்ரெப்டோகாக்கஸ்
2. ஸ்ட்ரெப்டோகாக்கஸ் நியுமோனியே
3. ஸ்டீஃபிலோகோகஸ் ஆரியஸ்

ஸ்டேஃபிளோகோகஸ் மற்றும் ஸ்ட்ரெப்டோகாக்கஸ் இனங்கள் ஆரோக்கியமான நபர்களில் வாய் வழி குழி மற்றும் மூக்கின் தோல் மற்றும் சளி சவ்வுகளின் சாதாரண குடியிருக்கும். வெட்டு அல்லது பிற காயம் காரணமாக உடைந்த தோல் இருக்கும் போது மட்டுமே இந்த பாக்டீரியா தொற்று ஏற்படுகிறது.

செல்லுலைட்டிஸின் பொதுவான காரணங்கள்

- தோல் விரிசல் அல்லது காயங்கள் (வெட்டுகள், கீறல்கள், துளைகள்)
- பல் கடித்தல், நீருக்கடியில் ஏற்பட்ட காயம்
- முன்பே இருக்கும் தோல் வியாதிகள் தோல் நிலைகள் அரிக்கும் தோலழற்சி தடகள பாதம் தோல் வெடிப்புகள்
- விலங்குக்கடி
- பலவீனமான நோய் எதிர்ப்பு அமைப்பு (தொற்றுக்கு எதிரான பாதுகாப்பின்மை)
- உடல் பருமன்
- முன்னர் செல்லுலைட்டிஸ் தொற்றுக் குள்ளாகி இருத்தல்
- நீரிழிவு, லிம்ஃப்இடிமா (நிணநீர் தேக்கத்தால் வீக்கம்)

செல்லுலைட்டிஸின் அறிகுறிகள்

- காலில் ஏற்படும் செல்லுலைட்டிஸ் பெரும்பாலும் திறந்த புண் அல்லது எரிச்சலூட்டும் தோலுக்கு அருகாமையில் ஆரம்பமாகுகிறது. இது விரைவாக பரவிச் செல்லும்.
- பாதிக்கப்பட்ட பகுதியைச் சுற்றி சிவந்து காணப்படும்
- வீக்கம் மற்றும் மென்மை
- தோல் வெப்பமாக இருக்கும்
- வலி அல்லது அசௌகரியம்
- தெளிவான அல்லது மஞ்சள் திரவத்தின் சாத்தியமான கசிவு
- சிவப்பு கோடுகள் உருவாகுதல்.

தொற்று மோசமடைந்தால் பின்வரும் அறிகுறிகள் ஏற்படும்

- காய்ச்சல் மற்றும் குளிர்
- தொட்டுணர்வின்மை பாதிக்கப் பட்ட தோலில் இறுக்கம்
- களைப்பு அல்லது உடல் நலக் குறைவு
- தொற்று பரவல் மூலம், நிணநீர்க் கணுக்களை வீங்கச்செய்யும்.
- இரத்த ஓட்டத்தில் நுழைந்தமைக்கான அறிகுறிகள் இவை. அவ்வாறான நிலையில் செல்லு லைட்டிஸ் ஒரு மருத்துவ அவசர நிலையாக மாறும்.

## நோய் கண்டறிதல்

*ஒரு வைத்திய அதிகாரியால் பொதுவாக உடல் பரிசோதனை மற்றும் அறிகுறிகளின் அடிப்படையில் நோய் நிலை கண்டறியப்படும்.*



ஒரு முழுமையான உடல் பரிசோத னையானது, செல்லுலைட்டிஸ் நோயைக் கண்டறிவதில் ஒருங் கிணைந்தது.

கடுமையான செல்லுலைட்டி ஸைக் கண்டறியப் பயன்படுத்தப்படும் சோதனைகள் பின்வருமாறு:

- **இரத்த சோதனை**: தொற்று இரத்தத்தில் பரவியுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவது இரத்த பரிசோதனையாகும்.
- **தோல் பரிசோதனை**: தோல் பரிசோதனை மூலம் செல்லு லைட்டிஸ் வகை கண்டறிய முடியும்.
- **இரத்தம் மற்றும் தோல் மாதிரி** பாக்டீரியா கல்ச்சர் ஏபிஸ்டி செல்லுலிடிஸை ஏற்படுத்தும் பாக்டீரியா வகையை கண்டறிய உதவும்.

கடுமையான தொற்று வேளை களில் இமேஜிங் (எக்ஸ் கதிர் பரி சோதனை, ஸ்கேன்) தேவைப்படலாம்.

## செல்லுலைட்டிஸ் சிகிச்சை

- செல்லுலைட்டிஸ் நோய்க்கு நுண்ணுயிர் எதிரிகளே முதன்மை சிகிச்சை ஆகும். வாய்வழி அல்லது நாளம் வழியாக நுண்ணுயிர் எதிரி மருந்துகள் (ஆன்ட்டிபயாட்டிக் மருந்துகள்) வழங்குதல்
- பாதிக்கப்பட்ட மூட்டுக்கு ஓய்வு வழங்குதல்.
- வலி நிவாரணி.
- 48 முதல் 72 மணி நேரத்திற்குள் மருந்து மாத்திரைகளின் செயல் பாட்டினால் நோய் குண மாதலின் முன்னேற்றத்தை அவதானிக்கலாம்.
- அறிகுறிகள் விரைவாக குறையத் தொடங்கினாலும், நுண்ணுயிர் எதிரி மருந்துகளை முழுமையாக செலுத்தி முடிப்பது மிகவும் அவசியமாகும்.
- ஏற்றம்:பாதிக்கப்பட்ட பகுதியை உயர்த்துவது இரத்த நாளங்களில் அழுத்தத்தைக் குறைக்கிறது, இதனால் இரத்த ஓட்டம் மேம்படும்.
- சுருக்க மறைப்புகள் அல்லது காலுறைகள் வீக்கத்தைக் குறைப்பதற்கும் சுழற்சியை மேம்படுத்துவதற்கும் உதவும். பாதிக்கப்பட்ட பகுதியை மிகவும் இறுக்கமாக மூடாதிருத்தல் நல்லது.
- கீறல் மற்றும் வடிகால்: ஒரு சீழ் உருவாகும் பட்சத்தில், சேகரிக்கப்பட்ட சீழ் வெளியேறவும், மாசுபாட்டின் அளவைக் குறைக் கவும் தோலில் ஒரு வெட்டு தேவைப்படலாம்.
- அறுவை சிகிச்சை சிதைவு, தீவிர சூழ்நிலைகளில், நெக்ரோடிக் அல்லது பாதிக்கப்பட்ட திசுக்களை அறுவை சிகிச்சை மூலம் அகற்றலாம்.

செல்லுலைட்டிஸ் அறிகுறிகள் தோன்றும்போது விரைவாக அதை கண்டுபிடித்து குணப்படுத்துவது அவசியமாகும். பின்வரும் சந்தர்ப்பங்களில் உடனடி மருத்துவ உதவியை நாட வேண்டும்.

காய்ச்சல் அல்லது அதிக சளி பாதிக்கப்பட்ட இடம் மிகவும் சிவப்பாக, வீங்கி, அல்லது வலி மிகுந்ததாக மாறுதல் சீழ் அல்லது திரவக் கசிவு நீரிழிவு நோய் அல்லது குறை நோய் எதிர்ப்பு சக்தி

## செல்லுலைட்டிஸ் நோயின் தீவிரமான சிக்கல்கள்

**சீழ் கட்டி (Abscess) உருவாக்கம்,:** இரத்த தொற்று (செப்சிஸ் Sepsis) அல்லது திசு இறப்பு (Necrosis) நிணநீர் தேக்கம் , அழற்சி

சிகிச்சையளிக்கப்படாத அல்லது போதுமான சிகிச்சை அளிக்கப்படாத செல்லுலிடிஸ் மிகவும் கடுமையான சிக்கல்களுக்கு வழிவகுக்கும்

**செப்சிஸ்**: இது உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் இரத்தத்தில் தீவிர தொற்று ஏற்படுதலாகும்.

**நிணநீர் அழற்சி:** இது நிணநீர் நாளங்களின் வீக்கம் ஆகும்.

**சீழ் கட்டிகள்**: இது தோலின் கீழ் சீழ் குவிவதைக் குறிக்கிறது.

**நெக்ரோடைசிங் ஃபாஸ்சிடிஸ்**:

இது கடுமையான சதை உண்ணும் தொற்று ஆகும். நோய் த்தொற்று ஏற்பட்ட இடம் இறந்து போதலால் கறுப்பு நிறமான தோற்றம் ஏற்படும்.



**லிம்ஃப்இடிமா**: நாள்பட்ட வீக்கத்தை ஏற்படுத்தும் செல்லு லைட்டிஸ் காரணமாக நிணநீர் மண்டலம் வீங்கி சேதமடையக்கூடும்.

மேற்கூறிய சிக்கல்கள் ஏற்பட்டால் எப்போதும் உடனடியாக மருத்துவ உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## தடுப்பு முறை

- காயங்களை சுத்தமாகவும் மூடியதாகவும் வைத்திருங்கள்.
- பரிந்துரைக்கப்பட்ட ஆண்டிபயோட்டிக் கிரீம்கள் அல்லது களிம்புகளைப் பயன்படுத்துங்கள்.
- சருமத்தில் விரிசல் மற்றும் வரண்ட தன்மையைத் தவிர்க்க ஈரப்பதமாக்குங்கள்.
- வெளியில் பாதுகாப்பான மூடிய காலணிகளை அணியுங்கள்.
- அடிப்படை தோல் நிலைகளுக்கு வியாதிகளுக்கு உடனடியாக சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள்
- காயங்களின் தோற்றத்தில் ஏற்படும் மாற்றங்களைத் தொடர்ந்து கண் காணிப்பில் வைத்து கவனித்து கொள்ள வேண்டும்

தொடர்ச்சியாக தொற்று நோய்களுக்கு ஆளாக நேரிட்டால்

நீண்டகால நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகள் அல்லது வாழ்க்கை முறை மாற்றங்களை பரிந்துரைக்கப்படுகின்றன

## நீரிழிவு நோயாளிகளில் செல்லுலைட்டிஸ்

செல்லுலைட்டிஸ், ஒரு பக்டீரியா தோல் தொற்று, மோசமான தோல் நிலை மற்றும் நரம்பு சேதம் காரணமாக குறிப்பாக நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் ஆபத்தாக அமைகிறது, இது நோய்த்தொற்றுகளை எதிர்த்துப் போராடுவதற்கு உடலைக் கடினமாக்குகிறது.

நீரிழிவு நோயாளிகளுக்கு செல்லு லைட்டிஸ் உருவாகும் வாய்ப்பை நீரிழிவு நோய் அதிகரிக்கிறது. உணர்திறன் இழப்பை விளைவிக்கும் நரம்பு சேதம், நீரிழிவில் ஒரு பொதுவான விளைவாகும். இது காலில் காயங்கள், தோலில் சேதங்கள் மற்றும் செல்லுலைட்டிஸ் ஏற்பட ஏதுவாகிறது. இது பக்டீரியாவை உள்ளே நுழைய அனுமதித்து விடுகிறது.

நீரிழிவு உயர் இரத்த குளுக்கோஸ் காரணமாக செல்லுலைட்டிஸ் அபாயத்தை அதிகரிக்கிறது, இது நோயெதிர்ப்பு செயல்பாட்டையும் பாதிக்கின்றது. பக்டீரியா மற்றும் தொற்று நுண்ணுயிரிகளை பெருகுதலை அனுமதிக்கிறது. செல்லுலைட்டிஸைத் தடுக்க, நீரிழிவு நோயாளிகள் வசதியான காலணிகள் மற்றும் பாதுகாப்பு கையுறைகளை அணிய வேண்டும் மற்றும் நோயின் அறிகுறிகளைக் கண்காணிக்க வேண்டும். காயத்தை சரிசெய்வதற்கான அறிகுறிகள் ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்குள் தோன்றவில்லை என்றால், அவர்கள் மருத்துவ உதவியை நாட வேண்டும்.

நீரிழிவு நோய் அல்லது குறைந்த இரத்த ஓட்டத்தன்மை நோய்கள்(வெரிகோஸ்) இருந்தால் எப்போதும் பாதங்களை பரிசோதித்து கொள்ளுங்கள். பாதங்களை நன்கு கழுவி உலர வைக்கவும், சுத்தமான காலுறை அணியவும், ஏனெனில் நீரில் நோயாளர்கள் மற்றும் வெரிகோஸ் நோய் உள்ளவர்களுக்கு இரண்டு கால்களும் மரத்துப்போன உணர்திறன் அற்ற நிலை எப்படி ஏற்படுவது அந்த நோய்களுக்கான நீண்ட கால பிரச்சினையாக அமைகிறது.

செல்லுலைட்டிஸ் என்பது சாதாரணமாக எடுத்துக் கொள்ளப் பட வேண்டிய ஒன்றல்ல. சிகிச்சை யளிக்கக்கூடியது என்றாலும், அதன் அறிகுறிகள் விரைவாக அதிகரித்து மோசமான விளைவுகளை ஏற்படுத்தலாம். அறிகுறிகள் தோன்றியவுடன் மிக கவனமாக செயல்பட்டு உரிய நிவாரணத்தை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

நன்றி!

# உலக நீதி வீழ்ந்த நாள்

## 1909 ஏப்ரல் 27

### வரலாற்றின் கருப்புப் பக்கங்களிலிருந்து...



இந்த உலகமும் அதன் மக்களும் தம் கலாச்சாரம் பண்பாட்டு அம்சங்கள் மற்றும் நீதியை விட்டும் விலகி அழிவை நோக்கிச் சென்ற நாள் ஒட்டுமொத்த மேற்குலகும் சூழ்ந்து பல தசாப்தங்கள் கடந்து ஒரு சகாப்தத்தை நோக்கிச் சென்றதோர் அழகிய வரலாற்று அத்தியாயங்கள் பொறிக்கப்பட்ட ஏடுகளை தீக்கிரையாக்கத் துவங்கிய அந்த நாள்

அந்த நாள் இரவு அந்நிய சக்திகளால் தூண்டப்பட்ட இராணுவ மற்றும் மாணவர் படையோடு ஏதுமறியா மக்களும் அம்மாளிகையின் வாயிலில் ஆவேசத்தோடு திரள் கின்றனர்.

இராணுவப் பாதுகாப்போடு ஒரு முதியவர் தள்ளாடியவாறு வெளியே வர, அவர் பின்னே பாலகன் ஒருவனோடு பெண்ணொருத்தியும் பின் தொடர்கிறாள்.

அம்முதியவர் அந்த வாயிலை நெருங்க நெருங்க திரண்டிருந்த மக்கட் கூட்டமோ மேலும் மேலும் கூச்சலிட்டனர், அவர்களை கவலை தோய்ந்த முகத்தோடு ஏறிட்டுப் பார்த்த அம்முதியவரையும் அவரின் குடும்பத்தினரையும் அங்கிருந்த காவலாளிகள் பாதுகாப்பாக குதிரை வண்டியில் ஏற்றி தலை நகரின் துறைமுகத்தினை நோக்கி விரைவாக அனுப்பி வைத்தனர்.

வெகுண்டெழுந்த மக்களுள் ஒருபகுதியினர், 'அதோ அந்த கிழவன் தங்கியிருந்த மாளிகையின் அறையினுள் ஏராளமான தங்கம் மற்றும் பெறுமதியான பொக்கிஷங்களை பதுக்கி வைத்திருக்கிறானாம்' என்று கூறிக்கொண்டே இராணுவக் காவலையும் மீறி அந்த ரம்மியமான மாளிகைக்குள் அத்து மீறி நுழைந்தனர்.

மாளிகையின் இரும்பு வாயில்கள் வீழ்த்தப்பட்டன. பொக்கிஷங்கள் நிறைந்ததாக கூறப்படும் அறையின் கதவுகளோ உடைக்கப்பட்டன. அதனுள் நுழைந்த அந்த மக்களோ ஒருகணம் திகைப்பில் ஆழ்ந்தனர்.

அவர்கள் கண்களோ அவ்வறையில் வீற்றிக்க வேண்டிய தங்கக் குவியலுக்கு பதிலாக பொக்கிஷங்களாய், விரிந்த நிலையில் இருந்த அந்த அல் - குர் ஆனையும் தொழுகை விரிப்பான அந்த முஸல்லாஹ்வையும் கண்ணுற்றதும் அவை கண்ணீரால் நனைந்தன.

அறைக் கதவுகளை உடைத்து உள்ளே வரும்போதிருந்த வேகம் தற்போது எங்கே சென்றது என்று தெரியவில்லை.

அதுவரை 'சுதந்திரம்... சுதந்திரம்.....' என கோஷங்கள் எழுப்பிய குரல்களோ அவர்களது குரல்வளைகளை அடைத்துக் கொண்டன.

வானை ஓங்கிய கரங்களோ தம் கன்னங்களையே பதம் பார்த்ததை எண்ணி, கைசேதத்தில் அழும் சத்தம் வெளிப்படா வண்ணம், அதே கரங்கள் அவர்கள் வாய்களை இறுக மூடிக் கொண்டன.

நிமிர்ந்திருந்த தலைகளோ தரையை நோக்கின. வீறுகொண்டு ஓடிவந்த கால்களோ விரக்தி பீடித்த நடையோடு, அந்த முதியவரான கலீபா-சுல்தான் அப்துல்ஹமீத் ஹான் அவர்களது அந்த அறையை விட்டு தம் வீடுகளை நோக்கி கலைந்து அதன் கதவுகளையும் தாழிட்டுக் கொண்டன.

இவையனைத்திற்கும் உஸ்மானிய சாம்ராஜ்யத்தின் 'கானுனே எஸாஸி' எனும் நாடாளுதுமன்றத்தில் அரங்கேற்றப்பட்ட நிகழ்வுகளும் ஒரு காரணமாகும்.

மேற்குலகின் வல்லரசுகள் இரும்புக் கரங்கொண்டு தம் சொந்த மக்களையே அடக்கிய வேளையில், இங்கே ஒரு சுல்தான் தன் தேசத்தினுள் அகதிகளாய் நுழையும் மக்களைக் கூட தம் நேசக் கரம் நீட்டி அரவணைத்தார்.

ஒட்டுமொத்த இஸ்லாமிய உலகினையும் ஒரே குடையின் கீழ் நீதியும் நேர்மையும் தவறாது ஆட்சிபுரிந்த, இஸ்லாத்தின் கலீபாவான சுல்தான் இரண்டாம் அப்துல்ஹமீத் ஹான் அவர்களின் மீது பொய்யான குற்றச்சாட்டுக்கள் பல அடுக்கடுக்காய் சுமத்தப்பட்டன.

அதையே காரணமாய் வைத்து சில தேசத்துரோகிகளிடம் இலஞ்சம் பெற்றுக் கொண்ட அப்போதிருந்த ஷெய்குல் இஸ்லாம் அவர்கள், இட்டுக் கட்டப்பட்டதோர் பத்வா (எனும் சட்டத்தினை) வரைந்து, அதனை 1909 ஏப்ரல் மாதம் 27ஆம் திகதியன்று மாலை வேளையில் உஸ்மானிய நாடாளுமன்றத்தில் படிக்க, இஸ்லாமிய உலகின் இறுதிக் கலீபா உஸ்மானிய சாம்ராஜ்யத்தின் சகல விதமான அதிகாரங்களையும்

*கொண்ட இறுதி உஸ்மானிய சுல்தான், மக்கா மற்றும் மதீனாவின் பாதுகாவலர் மஸ்ஜிதுல் அல்-அக்ஸாவை இறுதி வரை பாதுகாத்தவரான கலீபா-சுல்தான் இரண்டாம் அப்துல் ஹமீத் ஹான் அவர்களது பதவி கவிழ்க்கப் பட்டதோடு, இறுதியில் தான் அரவணைத்த மக்களாலே அவர் துரத்தப்பட்டார்.*

*அத்துடன் என்றும் தன் பிரகாசம் மங்கா இஸ்லாமிய கிலாபத்தின் சூரியனோ அன்று முதல் அஸ்தமனம் நோக்கி வீழத்துவங்கியது.*

*1923 இல் பெயரளவில் இருந்த உஸ்மானியக் கிலாபத்தானது நாடாளுமன்றத்தால் கலைக்கப் பட்டதுடன், மேலும் நயவஞ்சக ஸியோனிஸவாதியான முஸ்தபா கமால் அதாதுர்க் என்பவனின் தலைமையில் கீழ் அது சுருக்கப் பட்டதோர் துருக்கிய குடியரசாக மாறியது.*

*பின்னர் 1924 துருக்கியக் குடியரசில் தங்கியிருந்த உஸ்மானிய அரச வம்சத்தினருக்கு அங்கு தங்கு வதற்கான தடையுத்தரவினை அதா துர்கின் பாசிச அரசு பிறப்பித்துடன், சுமார் ஆறு நூற்றாண்டுகளுக்கு அதிகமான காலம் தாம் பூர்வீக தேசமாகக் கருதிய அனடோலியா வினை விட்டும் அதாவது நவீன துருக் கியை விட்டும் அவர்கள் கால வரையின்றி நாடுகடத்தப்பட்டனர்*

.

**கன்ஜுல் மஹ்ஜபீன்**

# உயிர்மை மரம்

**உயிரின் தாகத்துடன்
மலரத் துடிக்கும் மொட்டுகளும்,
நிறைவின் நிம்மதியுடன்
உதிர விரும்பும் பழுத்த இலைகளும்
மரத்தின் ஒரே கிளையில்
அசைந்து ஆடிட..**

**பெருமரத்தின் அருகிலுள்ள
வீட்டை நிறைத்திருக்கிறது
பல மரங்களின் வாசம்**

**மூடும் பொழுதும்
திறக்கும் பொழுதும்
கிறிச்சிடும் கதவின் சத்தம்
இருப்பை நிலைநிறுத்தும்
மரத்தின் எத்தனிப்பாக ...**

**நகர்த்தும் நாற்காலிகளின்
உராய்வுச் சத்தத்தில்
திடுக்கிறது மனது**

**ஒவ்வொரு முறையும்
விடாது சத்தமிடுகிறது ஊஞ்சல்
எந்த மரத்தின் அழுகையோ...
ஆடிய மகள் கீழிறங்க
பதட்டம் விலகியது**

**மரத்தின் வேரில்
தலைசாய்த்துப் படுத்தேன்
பூக்களுடன் சருகுகளையும்
உதிர்த்து வாழ்த்தியது
உயிர்மை மரம்**

**அன்புச்செல்வி சுப்புராஜ்**
**பட்டாபிராம், சென்னை - 600072**



# வலிகளும் வண்ணங்களும்...

றொசில்டா அன்டன் - இத்தாலி

அஜித்தின் வீடு ஒரு மருத்துவ மனை போல இருந்தது. சுவர்களில் தொங்கும் டாக்டர்களின் சான்றிதழ்கள், அடுக்கி வைக்கப்பட்டிருந்த மருத்துவப் புத்தகங்கள், மருந்துகளின் லேசான வாசனை என எல்லாமே மருத்துவ உலகைப் பிரதிபலித்தன. அப்பா ஒரு அறுவை சிகிச்சை நிபுணர், அம்மா ஒரு குழந்தைகள் நல மருத்துவர். அஜித்தின் அக்கா, ஆர்த்தி, மருத்துவப் பல்கலைக் கழகத்தில் மூன்றாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தாள். அந்த வீட்டின் விதி, அஜித்துக்கும் அதேதான். அஜித்துக்கு வரைவது, எழுதுவது என்று கலை சார்ந்த விஷயங்களில்தான் ஆர்வம் அதிகம். ஆனால், அவனுடைய ஆசைகள்

எல்லாம் பெற்றோரின் கனவுகளின் நிழலில் மறைந்து போயிருந்தன.

'அஜித், நம் குடும்பத்தின் பாரம்பரியம் இது. நீயும் ஒரு டாக்டர் ஆக வேண்டும்' என்று அப்பா சொன்னபோது, அதில் மறுப்பேதும் பேச முடியாமல் அமைதியாகக் கேட்டிருந்தான். அவனுடைய விருப்பம் பற்றிய பேச்சுகளுக்கே அங்கே இடமில்லை.

கடினமான மருத்துவப் படிப்பும், தொடர்ச்சியான தேர்வுகளும் அவனுடைய உலகைச் சுருக்கி விட்டன. வகுப்பறையில் அமர்ந்திருக்கும் போது கூட, அவனுடைய மனம் எப்போதோ வரைந்த ஓவியங்களைப் பற்றியும், முடிக்கப்படாத கதை களைப் பற்றியும் நினைத்துக் கொண்டிருக்கும். அவன் படிப்பது, அவனுடைய விருப்பத்திற்காக அல்ல, தன் பெற்றோரைக் கௌரவப் படுத்துவதற்காக மட்டுமே.

அஜித்தின் தனிமையைக் குறைப்பதற்காக, வீட்டில் ஒரு நாய் இருந்தது. அதன் பெயர் 'டெய்ஸி'. டெய்ஸி அவனுடன் விளையாடும், அவனுடைய சோகத்தைக் கண்ணீர் சிந்திப் பகிர்ந்து கொள்ளும், அவனுடைய கடினமான நேரங்களில் ஆறுதலாக இருக்கும். ஆனால் ஒருநாள், எதிர்பாராத விபத்தில் டெய்ஸி இறந்து போனது. அஜித்தின் வாழ்க்கையில் ஒரு பகுதி வெற்றுப் பகுதியாக மாறிப் போனது. டெய்ஸியின் இழப்பு அவனைக் கவலைக் கடலில் ஆழ்த்தியது.

வீட்டில் மற்றவர்கள் பிஸியாக இருந்தனர். அப்பாவின் அறுவை சிகிச்சைகள், அம்மாவின் நோயாளிகள், அக்கா ஆர்த்தியின் தேர்வுகள் என எல்லோரும் அவரவர் உலகத்தில் மூழ்கிப் போயிருந்தனர். அஜித்தின் துயரத்தைப் புரிந்துகொள்ள யாருக்கும் நேரமில்லை. அன்று இரவு, தன்னுடைய அறையில் தனிமையாக உட்கார்ந்து, அவன் ஒரு காகிதத்தை எடுத்தான்.

ஒரு பென்சிலை எடுத்து, அவன் மனதிலிருந்த வேதனைகளை, அவனுடைய கனவுகளை, டெய்ஸியின் நினைவுகளை என எல்லாவற்றையும் அந்தக் காகிதத்தில் வரைந்தான். அவனுடைய தனிமை, அந்த ஓவியத்தில் வெளிப்பட்டது. அவனுடைய இதயத்தின் வலி, கோடுகளாகவும், வண்ணங்களாகவும் மாறி வெளி வந்தது.

அவன் வரைந்த படத்தை ஒருமுறை பார்த்தான். அதன் பிறகு, அஜித்துக்கு ஒரு தெளிவு கிடைத்தது. அவனுடைய வாழ்க்கை என்பது பெற்றோரின் கனவுகளுக்குள் மட்டும் அடங்கிவிடக் கூடாது. அவனுடைய தனிமை, ஒரு புதிய பாதையைத் தேட அவனுக்கு உதவி செய்திருக்கிறது. அஜித்தின் எதிர்காலம் இனி மருத்துவம் மட்டுமாக இருக்காது, கலை அவனுடைய வாழ்க்கையின் புதிய பக்கத்தைத் திறக்கும். ஒரு மருத்துவ குடும்பத்தில் இருந்து வந்தாலும், தன் வழியைத் தானே தேடி, அதில்

பயணிப்பதற்கான முதல் அடியை அன்று அவன் எடுத்து வைத்தான்.

அஜித்தின் வாழ்க்கையில் மெல்லிய ஒளிக்கீற்றாய் தர்மினி வந்தாள். கல்லூரி ஆய்வகத்தில், ஒரு அரிய மருத்துவப் புத்தகத்தைத் தேடிக்கொண்டிருந்த போதுதான் அவளைச் சந்தித்தான். அவளுடைய சிரிப்பு, அஜித்தின் இறுக்கமான உலகத்தை நொறுக்கியது.

கண்களில் ஒருவித ஒளி, பேச்சில் தெளிவு, சிந்தனையில் சுதந்திரம். அவளும் அதே மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள், ஆனால் அஜித்தின் உலகத்துக்கு முற்றிலும் மாறானவளாக இருந்தாள் அவள் கவிதைகள் எழுதுவாள், சித்திரம் வரைவாள். அஜித்தின் மறைக்கப் பட்ட ஆசைகளின் பிரதி பலிப்பாய் அவள் இருந்தாள். அவளோடு பேசப் பேச, அஜித்தின் இதயம் இலேசானது. மருத்துவப் படிப்பு அவனுடைய கைகளை இறுக்கினாலும், அவளு டைய பேச்சுகள் அவனுடைய மனதை விடுதலை செய்தன. ஒரு நாள், தன் பென்சிலால் வரைந்த ஓவியத்தை தயக்கத்துடன் அவளிடம் காட்டினான். அதில் இருந்த வலியை, தனிமையைப் புரிந்து கொண்டாள். ‘அஜித், உன் கை விரல்களில் ஒரு டாக்டர் இல்லை, ஒரு கலைஞன் இருக்கிறான்’ என்று அவள் சொன்ன போது, அஜித்தின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. அதுவரை அவனுடைய ஆசையைப் புரிந்துகொண்ட ஒரே நபர் அவள்தான். அந்த நொடியில், அவளுடைய கைகளைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது. அவள் புரிந்து கொண்டது வெறுமனே ஒரு ஓவியத்தை அல்ல, அவனுடைய ஆழமான தனிமையையும் வலியையும். அவர்களின் காதல், வகுப்பறைக்கு வெளியே பூக்க ஆரம்பித்தது. அஜித்தின் வீட்டி லிருந்து வரும் அழுத்தத்தைப் புரிந்து கொண்டாள். அவன் படிக்கும் போதெல்லாம், அவனுக்குப் பக்க பலமாக இருந்தாள். ‘உனக்கு சோர்வாக இருந்தால், என்னிடம் பேசு. உன் கனவுகளை என்னிடம் சொல். நான் கேட்பதற்கு எப்போதும் இருக்கிறேன்’ என்று அவள் உறுதுணையாக இருந்தாள்.

ஒரு தேர்வு தோல்வியால் அஜித் உடைந்துபோனான். தந்தையின் கோபம், தாயின் மௌனம் என அனைத்தும் அவனைக் குற்ற உணர்ச்சியில் தள்ளியது. அப்போது தர்மினிதான் அவனுக்கு ஆறுதல் சொன்னாள். ‘அஜித், ஒரு தேர்வு உன் எதிர்காலத்தைத் தீர்மானிக்காது. நீ விரும்பும் வாழ்க்கையை வாழ்வதற்கு இது ஒரு படிக்கட்டு மட்டுமே’ என்று அவன் கைகளை இறுக்கமாகப் பிடித்தாள்.

அவளுடைய ஆதரவு, அஜித்துக்கு ஒரு புதிய தைரியத்தைக் கொடுத்தது. அவனுடைய வாழ்க்கை என்பது மருத்துவம் என்ற ஒற்றைப் பாதையில் செல்ல வேண்டியதில்லை என்பதைப் புரிந்துகொண்டான். அவனுடைய

தனிமை, இப்போது தர்மினியின் துணையால் நிரப்பப்பட்டிருந்தது. அவள் அவனுடைய காதலி மட்டுமல்ல, அவனுடைய கனவுகளுக்கும், தனிமைக்கும் ஒரு புதிய அர்த்தத்தைக் கொடுத்தவள்.

அஜித்தின் வாழ்க்கையில், தர்மினி ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கினாள். அது வெறும் காதல் அத்தியாயம் மட்டுமல்ல, தன் உண்மையான விருப்பத்தை நோக்கிய பயணத்தின் முதல் அத்தியாயமும் கூட.

அஜித்தின் வாழ்க்கையில் தர்மினி ஒரு புதிய அத்தியாயத்தைத் திறந்திருந்தாள். அவள் அவனுடைய கனவுகளுக்கு ஒரு புதிய மொழியைக் கொடுத்தாள். அவன் வரைந்த ஓவியங்களை அவள் சேகரித்து வைத்தாள். ஒரு நாள், ஒரு மருத்துவக் கண் காட்சிக்குச் செல்வதாகச் சொல்லி, தர்மினியுடன் சேர்ந்து, ஒரு ஓவியக் கண்காட்சிக்குச் சென்றான். அங்கு இருந்த ஓவியங்கள் ஒவ்வொன்றும் அவனுடைய மனதை வருடின. 'இதுதான் அஜித், உன் உலகம்' என்று தர்மினி சொன்ன போது, அது அவன் நீண்ட காலமாகத் தேடிக்கொண்டிருந்த ஒரு உண்மை போல இருந்தது.

அவனது பெற்றோருக்குத் தெரியாமல், அவர்கள் இருவரும் சந்தோஷமாகப் பேசிப் பழகி வந்தனர். மருத்துவப் படிப்பு அவர்களுக்கு ஒரு கசப்பான கடமையாக அல்லாமல், ஒன்றாகச் செலவழிக்கும் பொன்னான நேரமாக மாறியது. தர்மினியின் ஊக்கத்தால், அஜித் படிப்பிலும் இன்னும் சிறப்பாகச் செயல்பட ஆரம்பித்தான். அவனுடைய தனிமை குறைந்ததால், மனம் ஒருமுகப்பட்டு, தேர்வுகளில் நல்ல மதிப்பெண்கள் பெற்றான்.

ஆனால், ஒரு நாள், அஜித்தின் வாழ்வில் ஒரு புயல் வீசியது.

அஜித்தின் அப்பா அவனுடைய புத்தக அலமாரியைச் சுத்தம் செய்து கொண்டிருந்தபோது, ஒரு கோப்பு கிடைத்தது. அதில் அஜித்தின் மருத்துவக் குறிப்புகள் இருக்கின்றன என்று நினைத்து அதைத் திறந்தார். ஆனால், உள்ளே இருந்தவை அனைத்தும் அஜித்தின் ஓவியங்கள். மருத்துவப் புத்தகங்களுக்குப் பதிலாக, பென்சில் ஓவியங்களும், வண்ணங்களும் நிறைந்திருந்தன. அதில் ஒரு ஓவியம், டெய்ஸியின் நினைவாக அஜித் வரைந்தது. மற்றொரு ஓவியம், ஒரு தனிமையான மாணவன் மருத்துவப் புத்தகங்களுடன் உட்கார்ந்திருப்பது.

அப்பாவின் கோபம் உச்சத்தைத் தொட்டது. 'இது என்ன அஜித்? உனக்கு மருத்துவம் பிடிக்கவில்லை என்றால் ஏன் படிக்கிறாய்? இந்த வீட்டின் பாரம்பரியத்தை உன்னால் மதிக்க முடியாதா?' என்று கோபமாகக் கத்தினார். அஜித்தின் அம்மாவுக்கும் பெரும் அதிர்ச்சி. அவர் அஜித்தின் கைகளைப் பிடித்து, 'ஏன் அஜித், என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாமே?'

என்று கலங்கிய கண்களுடன் கேட்டார் அப்போதுதான், அஜித்தின் வாழ்க்கையில் தர்மினியின் இருப்பு குறித்து அப்பாவுக்குத் தெரிய வந்தது. அஜித்தின் தொலைபேசியைப் பார்த்த போது, தர்மினியுடன் அவன் பேசிய, அவளுக்கு அனுப்பிய கவிதை வரிகளும், ஓவியங்களும் கண்ணில் பட்டன. 'ஒரு டாக்டர் ஆவதற்கான தகுதியே இல்லாத ஒருத்தியுடன் உனக்கு என்ன வேலை?' என்று அப்பா தர்மினியை இழிவாகப் பேச, அஜித்தின் மனம் வெடித்துச் சிதறியது.

'அவளைப் பற்றி எதுவும் பேசாதீர்கள் அப்பா. அவள் எனக்காக இல்லை, என் கனவுகளுக்காக இருக்கிறாள். நான் ஒரு டாக்டர் அல்ல, ஒரு கலைஞன். அவள்தான் என் மனதை முதன் முதலில் புரிந்து கொண்டாள்' என்று ஆத்திரத்துடன் சொன்னான். அஜித்தின் வாழ்க்கையில் முதல் முறையாக, அவன் தன் விருப்பத்திற்காகப் பேசினான். அவனுடைய வார்த்தைகள் வீட்டின் அமைதியைக் கலைத்தன.

அப்பாவுக்கு இதய வலி ஏற்பட்டது போல உணர்ந்தார். அம்மா பதறிப்போய், 'அஜித், நீ எது சொன்னாலும், அப்பாவுக்கு எதுவும் ஆகாமல் பார்த்துக்கொள்' என்று அழுதார். அஜித், தன் அப்பாவின் கண்களில் இருந்த கோபத்தையும் வலியையும் பார்த்தான்.

அப்பாவின் கோபம் ஒரு புயல் போல வீசியது உண்மை தான். ஆனால், அந்த புயல் அஜித்தின் மனதில் இருந்த உண்மையை வெளிப்படுத்தியது. அன்று இரவு, வீடே அமைதியில் மூழ்கியிருந்தது. அஜித்தின் அப்பா தன் அறையில் உட்கார்ந்து, அவன் வரைந்த ஓவியங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். ஒரு ஓவியம், டெய்ஸியுடன் அஜித் சிரித்துக் கொண்டிருப்பது. மற்றொரு ஓவியம், மருத்துவப் புத்தகங்களுக்கு மத்தியில் ஒரு பென்சிலை கையில் பிடித்தபடி சோகமாக அமர்ந்திருப்பது. அவர் அஜித்தின் அம்மாவைப் பார்த்தார். 'அஜித், நிஜமாகவே எவ்வளவு கஷ்டப்பட்டு இந்தப் படிப்பைப் படிச்சிருக்கான் பாரு நம்ம கனவுக்காக அவன் அவனோட கனவை இழந்துட்டான்' என்று குரல் தழுதழுக்கச் சொன்னார். அம்மா அஜித்தின் பக்கத்தில் சென்று, அவன் வரைந்த ஓவியங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். 'அவனுடைய கண்களில் இருந்த சோகத்தை நாம் கவனிக்கலையே' என்று வேதனையுடன் கூறினார்.

மறுநாள் காலை, அஜித் எழுந்து வந்தபோது, ஹாலில் அவனுடைய ஓவியங்கள் எல்லாம் சுவரில் மாட்டி வைக்கப்பட்டிருந்தன. அப்பா அவனருகில் வந்து, 'அஜித், நான் ஒரு டாக்டரா என் கடமையைச் செஞ்சேன். ஆனா, ஒரு அப்பாவா என் கடமையைச் செய்யத் தவறிட்டேன். உன் கனவை நான் புரிந்துகொள்ளாமல் போயிட்டேன்' என்று சொன்னார். அஜித்தின் கண்கள் கலங்கின. 'அப்பா, எனக்கு

உங்க மேல கோபம் இல்லை. உங்க கனவை நிறைவேற்றணும்னு தான் நானும் நினைச்சேன். ஆனா என்னால முடியல' என்றான் அஜித். அப்போது, அம்மா அருகில் வந்து, 'நாங்க ரெண்டு பேரும் தர்மினியைப் பத்திப் பேசணும்' என்று சொன்னார். அஜித் அதிர்ந்துபோனான். அஜித்தின் அப்பா தர்மினியைச் சந்திக்க முடிவு செய்தார். தர்மினிக்கு அழைப்பு விடுத்ததும், அவள் தயக்கத்துடன் வந்தாள். ஆனால், அவள் அஜித்தின் பெற்றோருக்குக் கொடுத்த மரியாதை, அவளது புரிதல் என அனைத்தும் அஜித்தின் பெற்றோரை ஆச்சரியப்படுத்தியது.


'தர்மினி, எங்கள் பையன் ஒரு டாக்டர் ஆக வேண்டும் என்று நாங்கள் ஆசைப்பட்டோம். ஆனால், அவனுக்கு இதில் விருப்பம் இல்லை' என்று அப்பா மென்மையாகப் பேசினார்.தர்மினி மென்மையாகச் சிரித்து, 'அங்கிள், அஜித் டாக்டர் ஆக முடியாதுன்னு யாரும் சொல்லல. அவர் ஒரு டாக்டர். கூடவே, ஒரு நல்ல கலைஞர். ரெண்டும் அவர் வாழ்க்கையின் ஒரு பகுதி. அவருக்கு எது சந்தோஷத்தைத் தருதோ, அதைச் செய்ய நான் பக்கபலமா இருப்பேன்' என்றாள்.

அவளுடைய பேச்சைக் கேட்டு, அஜித்தின் பெற்றோர் மனம் நெகிழ்ந்தனர். 'நீ அவனுடைய வாழ்க்கைக்கு வந்ததே ஒரு நல்ல விஷயம்' என்று அப்பா பெருமையாகக் கூறினார்.

சில மாதங்களுக்குப் பிறகு, அஜித்துக்கும் தர்மினிக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. அந்த திருமண மண்டபத்தில், அஜித்தின் ஓவியங்கள் எல்லாம் அலங்காரமாக வைக்கப் பட்டிருந்தன. அஜித்தின் பெற்றோர், தங்கள் மருமகளுடன் பேசிக் கொண்டிருந்த போது, 'தர்மினி, நீ சொன்னதுபோல, அஜித்தை நல்ல டாக்டராகவும், சிறந்த கலைஞ னாகவும் மாற்றுவது உன் கையில் இருக்கு. அதுதான் எங்க ஆசை' என்றனர்.

தர்மினி சிரித்துக்கொண்டே, 'கண்டிப்பாக மாமா. உங்க கனவும் நிறைவேறும். அஜித்தின் கனவும் நிறைவேறும்' என்றாள். அஜித், இப்போது ஒரு மருத்துவர். ஒரு சிறந்த அறுவை சிகிச்சை நிபுணர். அதே சமயம், வார இறுதி நாட்களில், அவன் வரைந்து கொண்டும், பல கண்காட்சிகளில் தன் ஓவியங்களை வைத்தும் வருகிறான். அவன் மருத்துவ உலகில் ஒரு நல்ல பெயரைப் பெற்றான். கலை உலகில் ஒரு புதிய கலைஞனாகவும் உருவானான். அவனுடைய வாழ்க்கை, தன் பெற்றோர் மற்றும் தர்மினியின் கனவுகளால் நிறைந்திருந்தது. அவனுடைய தனிமை, காதல் மற்றும் கனவுகளின் துணையால் மறைந்துபோனது. அவன் இப்போது ஒரு டாக்டர் மட்டுமல்ல, ஒரு கலைஞன். ஒரு கணவன். அஜித்தின் வாழ்க்கை, அவனுடைய இதயத்தின் விருப்பத்தைப் பின்தொடர்ந்து, மகிழ்ச்சியுடன் நகர்ந்தது.

# பதுளை துங்ஹிந்த சாரலில் ஒரு ஜில்




மலையக இலக்கிய வரலாற்றில் ஜில் ஒரு மைல்கல்.

சாதாரண ஒரு வியாபாரியாக வலம் வந்த இந்திய வம்சாவளி மகனான சுல்தான் ஜில் பற்றிய வாழ்வியல் வரலாற்றை கண் முன்னே கொண்டு வந்து காட்டியப் பெருமை மூத்த கவிஞர் தேசத்தின் கண் தமிழ்மணி மானா மக்கீன் ஐயாவையே சாரும்.

பதுளை துங்ஹிந்த சாரலில் ஒரு 'ஜில்' என்ற ஆய்வு நூலில் ஜில் என்றதும் இயற்கை அழகுமிகு அருவிக்கருகில் நிற்கும்போது ஏற்படுகின்ற ஜில்லென்ற குளிரைப் பற்றி பறைசாற்றுகின்ற புத்தகமாக இருக்குமோ என்ற கேள்விக்கூட என்னகத்திலே பாய்ந் தோட ஆரம்பித்தது. உங்களுக்கும் அப்படி இருந்திருக்கலாம் என்று நினைக்கின்றேன் அதுதான் இல்லை

கே.கே.சுல்தான் அவருடைய வரலாற்று ஆவணத்தை நான் சத்தமாக அம்மாவிடம் வாசித்து காட்ட ஆமாம் மகன் ஜில் வெத்திலை என உடனே கூற அளவில்லா மகிழ்ச்சி புத்தகத்தை முழுமையாக வாசித்து முடிக்க வேண்டுமென்ற உற்சாகத்தையும் விறுவிறுப்பையும் தோற்றுவித்தது.

வாசிக்க வாசிக்க ஆய்வழகோ கொஞ்சம் கொஞ்சமாய் தேனாய் இனிக்க தொடங்கியது.நூலாசி ரியரின் ஆத்மார்த்தமான தேடல் மற்றும் வெளிப்பாடு என்பன காலத்தால் என்றும் மறையாத சுவடுகளைப் பதித்துச் செல்கிறது

அந்தகால மலையக வாழ் வியலோடு பின்னிப் பிணைந்த வேலை, இன்ப துன்பம், கொலைகள், என பல்வேறுப்பட்ட மனக் கிடக்கைகளை நாட்டார், மற்றும் தெம்மாங்கு பாடல்கள் மூலம் பாடி மக்களை கவர்ந்தது மட்டுமல்லாது பாடல்களை தனது ஆயுதமாக பயன்படுத்தி இருப்பது வெட்ட வெளிச்சமாகவும் கண்கூடாகவும் தெரிகிறது.

அன்று நடமாடும் நூலகமாக வலம் வந்த தெளிவத்தை ஜோசப், குடந்தையூரான் பாக்கியசாமி,சு தவச்செல்வன்,சாரணா கையூம், சாரல் நாடன், மு.நித்தியானந்தன், மு.சிவலிங்கம், செ.யோகராசா

போன்ற வரலாறு பேசும் உள்ளங்களின் புத்தகங்களில் ஜில் சுல்தான் அவர்களைப் பற்றி எழுதத் தவறவில்லை.

இப்படியான சிறந்த சமுதாயக் கரிசனை, சமூகப்பற்றுடைய ஜில் சுல்தான் அவர்களின் ஆத்மா சந்தோச மடையும் படியான ஆய்வுநூலை வெளியிட்ட பெருமை காலத்தால் அழியாது எப்போதும் மானா மக்கீன் ஐயாவை பற்றியே பேசி நகரும்.

ஆய்வு என்பதில் பேராசிரியர் சி.மௌனகுரு ஐயா குறிப்பிட்டது போல கண்டுபிடிப்பு இருத்தல், விமர்சனம் இருத்தல், சிந்தனை களைத் தூண்டுதல், அசர வைத்தல், வினாக்களை விடுக்க வைத்தல், பரந்த வாசிப்பை காட்டுதல், இவைய னைத்தும் ஒருசேர இட்டு உருவாக்கிய பஞ்சாமிர்தமாய் உண்ணக் கிடைத்தது.

இன்னும் பல இப்படியான ஆய்வு நூல்கள் எதிர்காலத்தில் நம் மாணவமணிகள் மத்தியிலும், இலக்கியவாதிகள் மத்தியிலும் வெளிவர மற்றும் சென்றடைய வேண்டுமென்பதே எனது அவா.

ஜில் என்பவருக்கு மனதிலே தோன்றிய எண்ணங்களே பாடல் களாகி பின் நூலாவணமாக வெளிவந்து இருப்பது அவரது ஆளுமையை வெளிக்கொணருகிறது.

எனவே அவர் எழுதிய ஓரிரு பாடல்கள் உங்களையும் சந்தோசத்தில் ஆழ்த்தும் என்ற நம்பிக்கையோடு,

'வாசமுள்ள ஜில்லு வாங்கி பார்த்து சொல்லு வாயில போட்டு மெல்லு வீட்டு அக்கா கிட்ட சொல்லு'

**குடியுரிமை நாட்டார் சிந்து**

'உள்ள ரத்தமெல்லாம் சிந்தினோம் - இங்கு அப்பனும் ஆத்தாளும் பிறந்தது - எங்கு இப்படி நாளெல்லாம் போகுது - நம்ம உரிமையும் இல்லாமே ஆகுது'

**பரிதாபச் சிந்து**

மண் விளைந்த நாட்டையெல்லாம் பொன்விளைய வைத்தது யாரு? மனதினிலே எண்ணிப்பாரு - சின்னத்தம்பி மருதப்பன் பொட்டுப் பிள்ளை-நல்லதம்பி என்பன ஜில்லின் தனித்துவம், சமூகப்பற்று, மறுமலர்ச்சி, மனக்கிலேசம் போன்ற பன்முகப் பாவனையை எடுத்தியம்பி இலக்கிய தேரில் இனிதே நகர்கிறது எழுத்தாளர் மானா மக்கீன் ஐயா இதுபோல் நன்னூல்களை தமிழ் இலக்கிய உலகுக்கு நல்க வேண்டுமென வாழ்த்துகிறேன்

**நூலின் விலை- 250/-**

**நூலினை வாங்குவதற்கான தொடர்பிலக்கம்-**

**0772521937**

**ஆக்கம்-**

தேசிய கலைஞர் காவத்தையூர் பழனியாண்டி கனகராஜா
கோணக்கலை தோட்டம்,
காவத்தை பிரிவு, பசறை.



# குறள்!
## மானுடத்திற்கான குரல்

திருக்குறள் தெய்வப் புலவர் வள்ளுவரால் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அருளப்பட்டது. 133அதிகாரங்களையும் 1330குறள்களையும் கொண்டு அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று முப்பால் பிரிவுகளாக வாழ்வியல் நெறியாக அதிகளவு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு, தன் தரத்தில் குறையாது பசும் பொன்னாக இன்றுவரை அறிவொளி வீசிக் கொண்டிருக்கிறது என்றால் தமிழ் நாட்டின் பெருமை அதுவே. 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு 'என்றால் வள்ளுவத்தின் பெருமையைச், சிறப்பைச் சொல்லவும் வேண்டுமா?

இக்குறளுக்கு பரிமேலழகர் தொட்டு மனோன்மணி சண்முகதாஸ் அம்மா வரையில் ஏராளமானோர் உரை எழுதியுள்ளனர். ஆனால், அவரவர் தன்தன் சிந்தனையின் தெளிவில் உரை எழுதியுள்ளார்கள். குறளில்

இல்லாதது எதுவுமில்லை. அவற்றைத் தெளிவாகப் புரிந்து கொள்வதில் சிக்கல், போதிய அறிவின்மை இருக்கலாம். அதற்காக, அதன் பொருளை மாற்றி எழுதுவதோ தவறாக அர்த்தம் கொள்வதோ மாபெரும் தவறு.

வள்ளுவரோ, ஔவையோ, பாரதியோ, எழுதியவற்றை திரிபு படுத்துவதோ, மாற்றி அமைப்பதோ முடியாத காரியம். காரணம், இவர்கள் தெய்வப் புலவர்கள். படைத்தவற்றை இறைவாக்காகக் கொள்ள வேண்டுமே தவிர, தப்பாகப் பயன்படுத்தி சாபத்திற்கு ஆளாகக் கூடாது.

முதலில் எந்த இலக்கியத்தைக் கையில் எடுத்தாலும் அதற்கான மரியாதை பணிவு என்பன வாசகனுக்கோ, படைப்பாளிக்கோ வேண்டும்.

வள்ளுவம் ஒன்றே முக்கால் அடியில் ஒரு மனிதனுக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லி வழிகாட்டி நிற்கிறது என்றால் மறுக்க முடியாது. செல்லரித்துப் போகும் மனிதம் குறளால் மீண்டும் புத்துயிர் பெறுகிறது.

அக்கால தொல்லோர் உலகைக் காண வேண்டுமா? புனிதமான காதலைச் சுவைக்க வேண்டுமா? விருந்தோம்பி மகிழ வேண்டுமா? சான்றாண்மையைக் கற்க வேண்டுமா,? அறத்தின் வழி தெரிய வேண்டுமா? பணிவுடன், பெருமையாய் வாழ வேண்டுமா? மதி நுட்பம் எதுவென்று அறிய வேண்டுமா? அசை பிரிக்க வேண்டுமா? திருக்குறளைப் படியுங்கள். போதும். எப்படியும் வாழலாம் என்று கூறாது இப்படித்தான் வாழ வேண்டுமென்று வகுத்து நிற்கும் வள்ளுவம்'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும் ' என்று சுட்டுவதை நோக்க வேண்டும்.


ஆக, அண்மைக் காலங்களில் வள்ளுவம் சிலரால் தவறான புரிதலுக்கு ஆளாவதைக் காண்கிறோம்.'தினைத்துணை நன்றி செயினும் பயன் தெரிவார் பனைத் துணையாகக் கொள்வர் பயன்தெரி வார்'என்னும் குறள் இடித்துரைப்பதைப் போல நன்றி உடையவர்களாக, தினை அளவன்றி உலகமே போற்றும் நூலைத் தந்த வள்ளுவரைப் போற்றுவோம். குறள் வழி நின்று வாழ்வியலைப் பரிசுத்தமாக்குவோம். வீணான வார்த்தைகளால் குறளை உச்சரிக்காமல் நிறைவாக வாழ இனிமேலாவது கற்றுக் கொள்வோம்.

தேகம் தேடும் சுகத்திலே தென்றலாகக் குறள் வீசட்டும்.

**- உடுவிலூர்க்கலா**

## நூல் விமர்சனம்

# கழுதை மனிதன்




சகோதரர் அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்களின் மூன்றாவது மொழி பெயர்ப்புச் சிறு கதைகள் நூலாக, அண்மையில் வெளியிட்ட “கழுதை மனிதன்’

நூலை வாசிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. நூல் வெளி யீட்டுக்கு சென்று இருந்த எனது சகோதரர் ரியாட் எனக்கு இதை அன்பளிப்பு செய்திருந்தார்.

இந்த நூல்வெளியீட்டுக்கு முன்னர் ’ஒரு சுறங்கை பேரீச்சம் பழங்கள்’, ’பட்டாம் பூச்சிக்கனவுகள்’ ஆகிய இரு மொழி பெயர்ப்புச் சிறுகதை நூல்களை இவர் வெளியிட்டு இருக்கிறார்.

அதையும் தேடி பார்த்து விட வேண்டும் என்ற ஆவல் இந்த நூலை வாசித்தவுடனே எனக்கு தோன்றி விட்டது.

‘சிறுகதை மொழிபெயர்ப்பில் ஆர்வம் ஏற்பட்டு நான் முதலில் மொழி பெயர்த்த கதைகளை கொண்ட தொகுதி இது

முறைப்படி இந்த தொகுதி தான் முதலில் வெளிவந்திருக்க வேண்டும். ஆனால் எனக்கே புரியாத காரணங்களால் அது பிற்போடப்பட்டு இப்போது வெளி வருகிறது ‘ என்கிறார் நூலாசிரியர்.

’தீப்பெட்டிகள்’ தொடங்கி, ’சென்பிராஸிஸ்கோ செல்லும் ஸ்தெப்பன் வூல்ஃப்’ வரை 101 பக்கங்களில் ஒன்பது சிறுகதைகள் உள்ளடங்கப்பட்டிருக்கும் இந்த நூல், அழகான அட்டைப் படத்துடன் கைக்கடக்கமாக வாசிக்கக் கூடிய நூலாக நம்மை கவர்ந்து விடுகிறது.

இத்தொகுதியில் இடம் பெற் றுள்ள சிறுகதைகளுள் இந்தி யாவைச் சேர்ந்த எழுத் தாளர்கள் இருவரின் கதைகளும், பெங்காலி எழுத்தாளரின் கதையும், ஈராக்கை சேர்ந்த இருவரது கதைகளும்,

துருக்கி பாகிஸ்தான், ஈராக்

ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களது ஒவ்வொரு கதையுமாக சிறந்த மொழி பெயர்ப்பு கதைகள் நம் வாசிப்புக்கு பெருவிருந்தாய் கிடைத்திருக்கின்றன.

இவை அனைத்தும் ஆங்கில வழி மூலமே மொழி பெயர்த்துள்ளதாக முதற் குறிப்பில் நூலாசிரியர் அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

நூலின் இறுதிப்பகுதியிலே கதாசி ரியர்களின் புகைப்படமும், அவர்களது விபரங்களும் தந்திருப்பதும் சிறப்பு.

இந்நூலைப் பற்றி நான் பேசுவதை விட இந்த நூலே உங்களிடம் அதிகம் பேசும். தேடி வாசித்துப் பாருங்கள்.

ஒரு படைப்பு மற்ற மொழிகளில் பலமுறை மொழிபெயர்ப்பு செய்யப் பட்டு வருகின்றவென்றால், அதன் உள்ளே இருக்கும் கருவும், கலை யம்சமும் ,மொழி அழகும் தொடர்ந்து உலகில் உள்ள அனைத்து மொழி வாசகர்களாலும் வரவேற்கப்படு கின்றனவென்பது தானே உண்மை.

நூலின் உள்ளடக்கத்தில் 'தீப் பெட்டிகள்' சிறுகதை தினகரன் வாரமஞ்சரியிலும், 'வெள்ளைப் பாம்பு' சிறுகதை யாத்ராவிலும், 'கசந்த காலை' சிறுகதை விடி வெள்ளியிலும் வெளிவந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

வெவ்வேறு நாடுகளின் எழுத்தாளர்கள் எழுதிய கதைகளை வாசிக்கும் போது கதைக்கு கதை வித்தியாசமான பின்னணி, கதை மாந்தர், அவர்களின் வித்தி யாசமான உணர்வுகள் போன்றவற்றை, ஆச்சரியத்தோடும் ரசனையோடும் வெளிப்படுத்துகின்றன இந்த கதைகள்.

முதல் சிறுகதையான பெங்காலி மொழியின் மிகச் சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவரான ஆஷா பூர்ணா தேவி எழுதிய 'தீப்பெட்டி' சிறுகதை, ஆரம்பமே எம்மைப் போன்ற பெண் வாசகிகளை அசத்தலுக்குள்ளாக்கி விட்டதெனலாம்.

இவர் பெண்களை தீப் பெட்டிக்கு' ஒப்பிட்டு கூறியிருப்பது பெண் சமுதாயத்தினருக்கான சிந்தனைத் தூண்டுதல் எனலாம்.

'ஒரு சிறு சுவாலை கொண்டு நூறு இலங்கைக்கு தீ வைக்கக்கூடிய மருந்து பொருள் தீப்பெட்டிகளிடம் இருந்த போதிலும், அடக்கமாகவும், அப்பாவித்தனமாகவும் சமையலறை, படுக்கை அறை, இங்கு அங்கு என எல்லா இடங்களிலும் இருக்கின்றன பெண்களைப் போல' என்கிறார்.

உங்களுக்கு உதாரணம் தர வேண்டுமா???

என்ற கேள்வியுடன் நம்மை கதைக்குள் அழைத்துச் செல்லும் பாங்கு உண்மையிலேயே உணர்ந்து மகிழத்தக்கதாகவே இருக்கின்றது.

வறிய குடும்பங்களில் பிறந்து வளர்ந்து, பணக்கார கூட்டுக் குடும்பத்து மருமகள்களாக சந்தேகப் புத்தியுள்ள ஆண் களோடு வாழ்க்கை நடத்தும் பெண்களுக்கான வாழ்வியல்

சோதனைகள் இக் கதையில் மிக அழகாக சித்தரிக்கப்பட்டிருக்கின்றன.

சமமற்ற அந்தஸ்தில் திருமணம் செய்யும் பெண்களின் மனப் போராட்டமும் கதாநாயகி நமீதா மூலம் தெளிவாகப்பட்டிருப்பது விழிப்புணர்வு.

அடுத்து நம் நாட்டு எழுத்தாளரான ஜெயந்தரட் நாயக்க அவர்களின். 'வெள்ளைப் பாம்பு' ஆங்கிலச் சிறுகதை நூலாசிரியரைக் கவர்ந்ததில் ஆச்சரியம் இல்லை.

ஏனெனில் வாசிக்கும் அனை வரையுமே சிந்திக்கத் தூண்டும் சிறு கதையாகவே நாம் இதனைக் காணலாம்.

கிராமிய சூழலில் வாழும் சமூகத்தினர் இடையே ஏற்படும் மனக் கசப்புக்கள், போட்டி பொறாமை, வயிற்றெரிச்சல் என்பன நாளாந்த வாழ்வியல் கோலங்களில், எவ்வளவு தூரம் வரை சம்பந்தப்பட்ட வீட்டவர்களை சிரமங்களுக்குள்ளாக்கி விடும் என்பதனையும் புரிய வைக்கும் அருமையான கதை இது.

வெள்ளைப் பாம்பை காண்பது அதிர்ஷ்டத்தை கொண்டு வரும் என்ற நம்பிக்கை, அயலவர்களுக்குள் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நம் முன்னோர்களின் 'தந்திரோபாயமாக 'கூட இருக்கலாம்.

ஆனாலும் அதை அதிஷ்டமாக கருதி வாழும் கிராமத்து மக்களின் சமாதான இணக்கப்பாடும் சமூக மாற்றத்திற்கான தூண்டுதல் எனலாம்.

அடுத்து துருக்கிய எழுத்தாளர் அஸீஸ் நெஸீன் எழுதிய 'கழுதை வணிகம்' துருக்கிய யூத வம்சத்தவர்களின் வாழ்வியலோடு சம்பந்தப்பட்ட கதை.

இக்கதையம்சம், கதையில் வரும் சம்பவங்கள், கதை மாந்தர்கள்,

என உயிரோட்டமான கதை நகர்விற்கு சான்று பகர்கின்றன.

தொல் பொருள்கள் தோண்டி எடுத்து விற்றல், பழைய ஜமுக்காளங்களை குறைந்த விலைகளுக்கு வாங்கி. வெளி நாட்டவர்களுக்கு விற்றல், புதிய தரமற்ற பொருட்களை மண்ணுக் கடியில் புதைத்து வைத்து பழைய தரமான பொருட்கள் போன்று தோன்றி எடுத்து ஏமாற்றி வெளிநாட்டவர்களுக்கு விற்று விடுவது போன்றவை வாசிப்போருக்கு ஆச்சரியத்தையும் சுவாரசியத்தை தருகின்றன.

துருக்கிய பழங்குடியினரின் வாழ்வியல் செயற்பாடுகளை நாமும் தெரிந்து கொள்ளக்கூடிய அற்புதமான கதை.

பத்துக்கும் மேற்பட்ட மொழி பெயர்ப்பு நூல்களை வெளியிட்ட ஈரானிய படைப்பாளி பாரி மன்சூர் அவர்களின் 'வானவில்'

ஈரானிய சிறுகதை கடமை உணர்வு மிக்க டாக்டர்.. அவரின் பாசமான புத்திசாலி மனைவி, மகள், டெக்ஸி ட்ரைவர் என

குறைந்த கதை மாந்தர்களை வைத்து மிக உணர்வுபூர்வமான கதையை தந்திருக்கிறார் கதாசிரியர்.

கதைமுடிவில் நம் மனங்களும் கனத்து தான் விடுகிறது. இதனால் தான் இக்கதை பாகிஸ்தானின் 'ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கான பாட ஆங்கில நூலில்' சேர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதென நூலாசிரியர் விவரித்துள்ளார்.

எல்பிட்டிய, பிட்டிகலையைச் சேர்ந்த புத்ததாஸ எழுதிய 'ஒரே ஒரு எதிர்பார்ப்பு' சிறுகதை, இருபதுக்கும் மேற்பட்ட அதிசிறந்த நாவல்களையும், சிறுகதை தொகுதிகளையும் எழுதிய ஈராக்கிய சிறந்த எழுத்தாளரான முகமது சயீத் எழுதிய 'கசந்த காலை' எனும் சிறுகதை இந்தியாவின் மத்திய பிரதேசத்தை சேர்ந்த மிருனாள் பாண்டே எழுதிய 'பெட்டை நாய்' சிறுகதை பாகிஸ்தானை சேர்ந்த முஹம்மது நசுருள்ளாஹ் எழுதிய 'கழுதை மனிதன்' என்ற சிறுகதை ஈராக்கில் பிறந்து லண்டனில் வசிப்பவரான சாமுவெல் ஷிமொன் எழுதிய 'சென் ப்ராஸிஸ்கோ செல்லும் ஸ்தெப்பன் வூல்ஃப்' சிறுகதை என்பன இப்புத்தகத்தை அலங்கரித்து இருக்கும் சிறந்த மொழிபெயர்ப்பு சிறுகதைகள் அனைத்தையும் விவரித்து விட தான் மனது துடிக்கிறது. இங்கு முடியாது என்பதால் தேடி வாசித்து அனுபவியுங்கள்!

எழுத்தாளர்கள் பற்றிய விபரங்கள் நூலின் இறுதிப் பக்கங்களில் இடம் பெற்றுள்ளன நூலாசிரியரின் புகைப்படமும், முன்னர் வெளி வந்த மொழிபெயர்ப்பு கதை நூல்களிலுள்ள மன்சூர்.ஏ காதர் (ஓய்வு பெற்ற தெ.கி. பல்கலைக்கழக உபவேந்தர்). கவிஞர் எழுத்தாளர் பஸ்லி ஹமீட், அஷ்ஷெய்க் பிஸ்தாமி அஹமட் ஆகியோரின் வாழ்த்துரை, அணிந்துரை, என்பவற்றின் பகுதிகள் பின்பக்க அட்டைப் படத்தை அலங்கரித்திருக்கின்றன.

தேடல்களால் நாம் பெறும் அனுபவங்கள் மகத்துவம் நிறைந்தவை. சிந்திக்க தூண்டுவது இலக்கியத்தின் அழகு. இப்படியான வேற்று மொழி இலக்கியங்கள் நாடுகள் பல கடந்தும் பயணித்துக் கொண்டே இருக்கின்றன.

இதை மொழிபெயர்ப்புச் செய்திருக்கும் நமது சகோதரர் அஸ்ரப் சிஹாப்தீன் அவர்களின் இலக்கியப் பணி காலம் கடந்தும் பேசப்படும் என்பது தெளிவு.

எமது நூலாசிரியர் நோய் நொடியின்றி நீண்ட காலம் வாழ்ந்து இன்னும் இப்படியான இலக்கியங்களை தமிழ் இலக்கிய உலகுக்கு தர வேண்டும் என பிரார்த்தித்து வாழ்த்துவோம்.

**சித்திமிஸ்ரியா அமீன்.**

**கிண்ணியா**

## ஆளுமை - அறிமுகம்

அன்பின் பாதை'ஊடாக தனியொரு நபராக சமூகப்பணியாற்றும்

# றொசில்டா

திருகோணமலை மண்ணில் நிதர்சன வாழ்வியல் முறைகளையும், சமூகத்துள் புரையோடிப் போயுள்ள பெண்ணியல் பிரச்சினைகளையும் தன் எழுத்துக்களால் வெளிக் கொண்டு வருபவரும், மக்களின் வறுமை நிலை போக்க மனிதநேய தொண்டு நிறுவனத்தின் நிறுவுனராக இருந்து சமூகப் பணி ஆற்றி வருபவரும் புலம் பெயர்ந்து இத்தாலி நாட்டில் வசித்து வருபவருமான திருமதி றொசில்டா அன்டன் திரு. திருமதி காசிம் சாந்தா மண இணையருக்கு முதன்மை மகளாய்ப் பிறந்த இவர் தந்தையார் இஸ்லாம் மதத்தினைச் சார்ந்தவராகவும், தாய் கத்தோலிக்க மதத்தினைச் சார்ந்தவராகவும் இருந்த போதிலும் இவரது பெற்றோர் மொழியால் ஒன்றாகி இருந்தனர். இவர் பிறப்பிலிருந்து கத்தோலிக்க மதத்தையே பின்பற்றி வருகின்றார்.





திருகோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் 2002 ஆண்டு உயர்தரம் கலைப்பிரிவில் கல்வியைக் கற்ற இவர் படிக்கும் காலத்திலேயே பேச்சுப்போட்டி, கவிதை, நாளாந்த வாராந்த பத்திரிகைக்கு ஆக்கங்கள் எழுதுவது இவ்வாறாக இவரது இலக்கிய முயற்சி முளைவிட ஆரம்பித்தது. கல்வியிலும் , எழுத்துத்துறையிலும் தன் ஆர்வத்தை வெளிப்படுத்தி நின்ற றொசில்டா அவர்களை குடும்பச்சுமை மூத்த பிள்ளை என்ற வகையில் அழுத்தத்தைக் கொடுக்க ஆரம்பித்தது. அன்று முதல் தனியார் சமூகத் தொண்டு நிறுவனம் ஒன்றில் கடமையாற்றி தன்சார்ந்த குடும்ப பொறுப்புகளை ஏற்றுக் கொண்டார். 2009 ஆம் ஆண்டின் போர் மௌனிப்பின் பின்னராக 'தமிழினி' என்ற புனை பெயரில் மீண்டும் பத்திரிகைகளில் சமூக வலிகளையும், வேதனைகளையும், சமூகம் சார் விழிப்புணர்வுக் கருத்துகளையும் ஒரு பெண்மையின் பாத்திரமாக நின்று சமூக வெளியில் படைப்புகளை பிரசவிக்க ஆரம்பித்தார். அந்த வகையில் வீரகேசரி, மித்திரன் வாரமலர், சுடரொளி போன்ற பத்திரிகைகள் இவரது சிந்தனைக்கு களம் கொடுத்தன.

2019 ஆம் ஆண்டு உலகமெங்கும் கொரோனா தலைவிரித்தாடிய காலத்தில் மக்களின் தொழில்கள் முடங்கின, வாழ்வாதாரம் பெரும் கேள்விக்குறியாகியது, நாளாந்த கூலித் தொழிலாளர்களுடைய பணபலமும், மனபலமும் சரிவு நிலை கண்டது. இவற்றைக் கண்ணுற்ற றொசில்டா அவர்கள் 'அன்பின் பாதை சமூகம்' எனும் அறக்கட்டளை அமைப்பை நிறுவி தனிப் பெண்ணாக மக்கள் சேவையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி 'அன்பின் பாதை' எனும் முகநூல்ப் பக்கத்தில் இவற்றைப் பதிவிட்டும் வருகிறார்.

புலம்பெயர் தனவந்தர்கள், பரோபகாரிகளின் மனிதநேய நிதிப் பங்களிப்பில் உதவிகள் வழங்க



ஆரம்பித்தார். அன்று முதல் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான வாழ்வாதாரம், வறிய மாணவர்களின் கல்வித் தேவைக்கான உதவிகள் என ஆரம்பித்த இவரது சமூகப் பணி மென் மேலும் விரிவாக்கம் பெற்று பிரதேச தன்னார்வ இளைஞர்கள், யுவதிகளும் இவரது கரத்தைப் பலப்படுத்தி ஒற்றுமையோடு ஒன்றாகிப் பயணிக்கலாயினர். இதன் அடுத்தகட்ட முயற்சியாக 'எண்ணம்போல் வாழ்க்கை' கலை இலக்கிய மன்றம் உதயமாகியது. இதனூடாக கலை இலக்கிய படைப்பாளர்கள், ஆர்வலர்கள் உள் வாங்கப்பட்டு நூல் வெளியீடுகள் நூல் அறிமுகம், சஞ்சிகைகளுக்கு ஆக்கம் எழுதுவித்தல், பாடசாலை மட்டங்களில் போட்டிகள் நடாத்துதல், நிகழ்வுகளை மேடை யேற்றுதல், வாழும் போதே வாழ்த்துதல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு பாடசாலைகள் தோறும் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் 'நூல் கொண்டு நிமிர்வோம்' எனும் தொனிப் பொருளில் வாசிப்பை ஊக்குவிக்கும் பணி தற்போதும்



இவரது சிந்தையின் பிரகாரம் உருப்பெற்று நிற்கிறது. தாயகத் தின் மீதும், இயற்கை மீதும் இவர் கொண்டிருக்கும் தீராத பற்று றுதியினால் 'பசுமைத் தாயகம்' என்ற அமைப்பினை நிறுவி அதன் ஊடாக மரங்களை வளர்த்தல், சிரமதானப்பணிகள், கிராமங்களை அழகுபடுத்தல் என்பவற்றோடு 'மண்ணும் மனிதமும் காப்போம்' என்ற செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறார். ஒரு பெண்ணாக தான் சார்ந்த இனத்தின் பொருளாதார மேம் பாட்டிற்காகவும், கலை கலாச்சார வாழ்வியல் உயர்ச்சிக்காகவும் நேர்மையுடனும் சேவை மனப் பாங்குடனும் அறப்பணிகளை ஆற்றிவரும் இவர் தற்போது புலம் பெயர்ந்து இத்தாலி நாட்டில் வசிக்கின்ற நிலையிலும், தாயகத்தில் ஆற்றிய பணிகளை தன் நண்பர்கள் வட்டம் ஊடாக மேற்பார்வை செய்து முன்னெடுத்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அதுமட்டுமன்றி தாயகப் பத்திரிகைகளில் கவிதை, சிறுகதை, விமர்சனம், நூல் நோக்கு என பல வகையான ஆக்கப் பிரபாகங்களை எழுதிவருகிறார்.

2024 ஆம் ஆண்டு 'ஓய்ந்த பின்பும் ஓயாத அழைப்புக்கள்' எனும் தலைப்பில் சிறுகதை தொகுப்புகளை நூலாக்கி ஈழத்து இலக்கிய பரப்பில் சங்கமிக்க விட்டுள்ளார். இவரது சிறுகதைத் தொகுப்பானது சமூகத்துள் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்திய, சமூக வாழ்வியல் முறைகளை



முன்னிறுத்திய விழிப்புணர்வுசார் கருத்துகளை கற்பனைப் பெயர்கள் ஊடாக பதிவு செய்திருக்கும் விதம் வாசிப்போர் மத்தியில் பெரும் ஆர்வத்தை தூண்டிவிட்டிருக்கிறது எனலாம்.

இந்நூலின் நூலாசிரியரும் சமூக சேவகியுமான திருமதி றொசில்டா அன்டன் அவர்கள் புலம்பெயர் உறவுகளின் நிதி உதவியுடன் 37 மாணவர்களின் மேலதிக கற்றல் நடவடிக்கைகளை கண்காணித்து செயற்படுத்தி வருகிறார்.

இவர் கலை இலக்கிய பணிகளுக்காகவும், சமூக சேவைச் செயற்பாடுகளுக்காகவும் பெற்றுக் கொண்ட விருதுகள்,





- 2022 ஆம் ஆண்டு மனித உரிமைகள் மக்கள் பாதுகாப்பு அமைப்பினால் 'சமசிரி தேச கீர்த்தி' விருது வழங்கப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டு கனடாவைத் தலைமையகமாக கொண்டு இயங்கும் விழித்தெழு பெண்கள் அமைப்பினர் சமூக சேவைக்கான விருதினை வழங்கிக் கௌரவித்தனர்
- 2024 ஆம் ஆண்டு இலண்டன் சிறுகதை மஞ்சரி ஆசிரியர் குழுவினர் இவரது சிறந்த சமூக, கலை இலக்கிய செயற்பாடுகளைப் பாராட்டி கௌரவித்து மதிப்பளித்திருந்தனர்.

'றொசில்டா அன்டோ' எனும் தனது முகநூல் ஊடாக மூத்த கலைஞர்கள், கலை இலக்கியப் படைப்பாளர்களாக இருந்து இம் மண்ணை விட்டு மறைந்தவர்கள், வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள் போன்றோர் ஆற்றிய கலை இலக்கியப் பணிகள் பலரும் அறியும் வகையில் 'வாரம் ஒரு ஈழத்து கலைஞர் பற்றி அறிவோம்' எனும் தலைப்பினூடாக வாரந்தோறும் பதிவேற்றி வருகிறார்.

பெண்ணியப் படைப்பாளி சமூக சேவையாளர் திருமதி றொசில்டா அவர்களின் அறப்பணிகளும், கலை இலக்கியப் பணிகளும், பிறர் நலம் சார்ந்த கருணைப் போக்கும் மென் மேலும் சிறப்புப் பெற ஈழத்துக் கலை இலக்கிய உறவுகளும், உலகம் வாழ் மனித நேய சொந்தங்களும் பெரிதும் கரம் கொடுத்து உதவ வேண்டுமெனும் வேண்டுகையோடு அவரது பணிகள் தொடர வாழ்த்தி நிற்போமாக.

தகவல் - **கனகதீப காந்தன்**
பாலையூற்று, திருகோணமலை



## சமூகப் பணிகளில் சில...











# COST OF LIVING
# SRI LANKA

| | | Jan 2022 | | Nov 2024 |
|---|---|---|---|---|
| Coconut (Avg.) | Rs./Nut | 85.00 | Rs./Nut | 165.00 |
| Coconut oil | Rs./Ltr | 648.00 | Rs./Ltr | 741.00 |
| Sugar (White) | Rs./kg | 138.00 | Rs./kg | 260.00 |
| Egg (White) | Rs./Each | 21.00 | Rs./Each | 35.00 |

*Source: Central Bank, Sri Lanka*

**If you had Rs. 100 in 2022, you could have purchased 1 coconut. How many can you purchase with Rs. 100 now?**

**If this is the fate of a simple household item, what about larger expenses?**

*Education* **Home purchase** *Weddings* *Surgeries*

**Does your savings plan consider inflation?**

*Retirement* *Vehicle purchase* *Debt reduction*

Investment plans starting from Rs. 6,000 per month.
0% interest installments from all leading banks.




LETS CHAT NOW

+94776029933

nuhamilan.o@gmail.com



NUHA MILAN

*Licensed Wealth Planner, Sri Lanka*
(RG146 compliant, Australia)


9 772719 252001